856

ஹெக்டர் கொப்பேகடுவ
கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்

28 AUG 2009

# வருடாந்த அறிக்கை
# 2008

ஹெக்டர் கொப்பேகடுவ
கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்
114, விஜேராம மாவத்தை
கொழும்பு 7

ARTI Annual Report Tamil 2008

856

28 AUG 2009

# வருடாந்த அறிக்கை
# 2008

**ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்**
**114, விஜேராம மாவத்தை**
**கொழும்பு 7**

## உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| வருடாந்த அறிக்கை - 2008 | 01 |
| ஆளுனர் சபை | 03 |
| கமத்தொழில் கொள்கை, கருத்திட்ட ஆய்வுப் பிரிவு | 05 |
| சூழல் நீர் வளங்கள் முகாமைத்துவப் பிரிவு | 13 |
| சந்தைப்படுத்தல், உணவு கொள்கை கம-வியாபாரப் பிரிவு | 16 |
| மனித வளங்கள் நிறுவனரீதிசார் அபிவிருத்திப் பிரிவு | 23 |
| 2008 டிசம்பர் 31இல் உள்ளவாறு பதவியணியினர் நிலை | 30 |
| பதவியணியினரின் முன்னேற்றம் | 30 |
| கணக்குகள் | 32 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 43 |

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி
பயிற்சி நிறுவகம்,
114, விஜேராம மாவத்தை,
கொழும்பு 07.
28.05 2009

கௌரவ கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சர்
கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு
"கொவிஜன மந்திரய"
80/5 ரஜமல்வத்த வீதி
பத்தரமுல்ல

**வருடாந்த அறிக்கையும், கணக்காயப்பட்ட கணக்குகளும் - 2008**

1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)ஆம் பிரிவின் பிரகாரம் ஆளுனர் சபையின் சார்பில் 2008 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான பின்வரும் ஆவணங்களை நான் சமர்ப்பிக்கின்றேன்.

(1) வருடாந்த அறிக்கை
(2) வருமானம், செலவினத்தின் கணக்காயப்பட்ட கூற்று
(3) கணக்காயப்பட்ட ஐந்தொகை
(4) கணக்குகள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் செய்யப்பட்ட அவதானிப்புகள்

தங்கள் விசுவாசமுள்ள

.......................................
தலைவர்
ஆளுனர் சபை

# வருடாந்த அறிக்கை - 2008

1972இன் 5ஆம் இலக்க கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகச் சட்டத்தின் கீழ் 1972இன் நியதியாக்க உறுப்பொன்றாக ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகம் (ஹெ.க.ஆ.ப.நி.) தாபிக்கப்பட்டது. இது கமநல அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சின் கீழ் நியதியாக்க உறுப்பொன்றாகத் தொழிற்படுகின்றது. கமநல மற்றும் கிராமியத் துறையின் கொள்கை முனைப்பிலான ஆராய்ச்சி மற்றும் பயிற்சித் தேவைகளை மேம்படுத்துவதற்காக பிரதானமாகத் தாபிக்கப்பட்டது. அது 1972இல் நாட்டில் கமநல ஆராய்ச்சியின் முன்னோடியொன்றாகத் தாபிக்கப்பட்டது முதல் சமூக-பொருளாதார ஆராய்ச்சியையும், பயிற்சியையும் நடத்துவதிலும், கமநலத் துறை அபிவிருத்திக் கொள்கைகளை வகுத்தமைப்பதற்காக தகவலை வழங்குவதிலும் முப்பத்தைந்து வருடங்களுக்கு மேற்பட்ட வளமிக்க அனுபவங்களை ஹெ.க.ஆ.ப.நி. கொண்டுள்ளது.

**கடப்பாடு**

மேற்படி சட்டத்தின் பிரிவு 3(1)இன் ஏற்பாடுகளின் கீழ், நிறுவகத்தின் பொதுவான கடப்பாட்டிலான நோக்கங்கள் வருமாறு:

i. கமநல ஆராய்ச்சியில் பேணுதல், உதவியளித்தல், ஊக்கமளித்தல் அத்துடன் ஒத்துழைத்தல்;
ii. அரசாங்கத் திணைக்களங்கள், உள்ளூராட்சிச் சபைகள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், மற்றும் வேறு நிறுவனங்கள் ஆகியவற்றினால் பொறுப்பேற்கப்பட்ட கமநல ஆராய்ச்சியை ஒருங்கிணைத்தல்;
iii. கமத்தொழிலின் முன்னேற்றத்தைப் பாதிக்கும் நிறுவனரீதியான காரணிகள் தொடர்பில் ஆய்வுகளையும், ஆராய்ச்சியையும் மேற்கொள்ளுதல்;
iv. கமத்தொழில் நோக்கங்களுக்காக காணியின் பொருளாதார உபயோகம் தொடர்பில் ஆய்வுகளையும், ஆராய்ச்சியையும் மற்றும் கற்கைகளையும் பொறுப்பேற்றல்;
v. கமத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி தொடர்பில் சமூக-பொருளாதார ஆராய்ச்சியை மேற்கொள்ளுதல்;
vi. கமநல ஆராய்ச்சி தொடர்பாக பயிற்சி வசதிகளையும், திட்டங்களையும் ஒன்றில் தனியாக, அல்லது இலங்கையில், அல்லது வெளிநாடுகளில் உள்ள வேறு நிறுவனங்களுடன் இணைந்து வழங்குதல் அல்லது அமுல்செய்தல். அத்துடன் இவை தொடர்பில் டிப்ளோமாக்கள், பட்டங்கள், பரிசுகள், அதிவிசேட சித்திகள் ஆகியவற்றை வழங்குதல்.
vii. உள்ளூர், பிராந்திய மற்றும் சர்வதேச மட்டங்களில் மகாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் ஆகியவற்றுக்கு ஆதரவளித்தலும், நடத்துதலும்;
viii. ஆசிய நாடுகளின் பிராந்தியத் தேவைகளுக்கு சேவையாற்றுவதற்காக அவற்றின் ஒத்துழைப்புடன் கமநலக் கட்டமைப்பின் பிரச்சனைகள் தொடர்பில் இத்தகைய ஆராய்ச்சியை மேற்கொள்ளுதலும், கமநலப் பிரச்சனைகள் மீது தகவலைச் சேகரிப்பதற்கும், பரப்புவதற்கும் நிலையமொன்றை வழங்குதலும்;
ix. இத்தகைய ஆராய்ச்சியை விசேட மேற்கோளுடன் இலங்கைக்கும், பொதுவாக ஆசிய நாடுகளுக்கும் கமநல அபிவிருத்தியுடனும், நவீனமயப்படுத்தலுடனும் தொடர்பான பிரச்சனைகளுக்கு தொடர்புபடுத்தல்.

**நோக்கு**

நிலைத்திக்கத்தக்க கமநல மற்றும் கிராமிய அபிவிருத்திக்கு அறிவைத் தோற்றுவிப்பதற்கும், பரப்புவதற்கும் தலைமைப் பதவியை வகித்தல்.

**செயற்பணி**

ஆராய்ச்சி மற்றும் பயிற்சிச் செயற்பாடுகளை நடத்துவதன் மூலம் கமநல மற்றும் கிராமியத் துறையைப் பலப்படுத்துதல்

**குறிக்கோள்கள்**

i. கமநல பிரச்சனைகள் தொடர்பில் சமூக-பொருளாதார ஆராய்ச்சியில் திறமையின் நிலையமொன்றாக விளங்குதல்;
ii. அரசாங்க, வியாபார மற்றும் ஆராய்ச்சி சனசமூகங்களில் திட்டமிடலாளர்களுடனும், கொள்கை வகுப்போருடனும் நெருக்கமாக இணைந்திருத்தல்;
iii. அறிவைத் தோற்றுவிப்பதன் மூலமும், நேர காலத்திற்கு பரப்புவதன் மூலமும் கொள்கை நடைமுறையை அதிகளவு செயற்றிறனாக்குதல்;
iv. தேசிய கொள்கைப் பிரச்சனைகள் மீது சுதந்திரமான மதிப்பீடுகளை வழங்குவதன் மூலம் அரசாங்கத்திற்கு அறிவித்தல்;
v. அதன் பணியாளரின் ஆற்றலளவுகளிலும், நிறுவனத்தின் அறிவுத் தளத்திலும் மூலதனமிடுவதன் மூலம் சமூக-பொருளாதார கொள்கைக்கான ஆற்றலளவைப் பலப்படுத்துதல்;
vi. பயிற்சியின் ஊடாக கிராமிய அபிவிருத்திப் பங்குதாரர்களின் ஆற்றலளவை அதிகரித்தல்.

**பணியாளர்**

தமது தொழில் தேவைப்பாடுகளைத் திருப்திகரமாக மேற்கொள்வதற்கு ஊழியர்களுக்கு உகந்ததாக வேலைச் சூழலொன்றை நிறுவகம் உருவாக்கியுள்ளது. மதிப்புரையின் கீழுள்ள ஆண்டில், ஆராய்ச்சிப் பணியாளரின் வயதுப் பகுப்பாய்வை 46 வருடங்கள் 2 மாதங்கள் என நாம் கவனத்திற்கெடுக்கின்றோம். புள்ளிவிபரப் பணியாளரின் சராசரி வயது 47 வருடங்களாகும். 2008 டிசம்பர் 31இல் உள்ளவாறு வயதுப் பகுப்பாய்வும், சேவைப் பகுப்பாய்வும் அட்டவணை 1இலும், அட்டவணை 2இலும் புறம்பாக வழங்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1: 2008 டிசம்பர் 31இல் உள்ளவாறு பணியணியினரின் வயதுப் பகுப்பாய்வு**

| வயது குழு | முகாமைத்துவ பணியணியினர் | ஆராய்ச்சி பணியணியினர் | புள்ளிவிபர, தரவுப் பகுப். பணியணயினர் | எழுதுவினைஞர் மற்றும் இணைந்த | கீழ் தரங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 60க்கு மேல் | 02 | - | - | - | - | 02 |
| 51 - 60 | 04 | 11 | 04 | 16 | 12 | 47 |
| 41 - 50 | 05 | 07 | 12 | 10 | 10 | 44 |
| 31 - 40 | 03 | 12 | 08 | 16 | 10 | 49 |
| 21 - 30 | - | - | - | 09 | 04 | 13 |
| 20 மற்றும் அதற்கு கீழ் | - | - | - | - | - | - |
| மொத்தம் | 14 | 30 | 24 | 51 | 36 | 155 |

**அட்டவணை 2: 2008 டிசம்பர் 31இல் உள்ளவாறு ஊழியர்களின் சேவைப் பகுப்பாயவு**

| வயது குழு | முகாமைத்துவ பணியணியினர் | ஆராய்ச்சி பணியணியினர் | புள்ளிவிபர, தரவுப பகுப். பணியணயினர் | எழுதுவினைஞர் மற்றும் இணைந்த | கீழ் தரங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 20க்கு மேல் | 03 | 10 | 09 | 16 | 17 | 55 |
| 16 - 20 | 03 | 05 | 03 | 03 | 03 | 17 |
| 11 - 15 | 01 | 03 | 08 | 08 | 03 | 23 |
| 06 - 10 | - | - | 04 | 12 | 02 | 18 |
| 05க்கு கீழ் | 07 | 12 | - | 12 | 11 | 42 |
| மொத்தம் | 14 | 30 | 24 | 51 | 36 | 155 |

மதிப்புரையின் கீழுள்ள ஆண்டு நிறுவகத்தின் தொழிற்பாட்டின் 36 ஆண்டுகளை முடித்துள்ளதைக் குறித்துரைக்கின்றது. கமத்தொழில் பண்டங்களின் உற்பத்தியில் குறித்துரைக்கப்பட்ட மேம்படுத்தலுடன் இவ்வருடத்தின் "அபி வவமு, ரட்ட நகமு" என்ற அரசாங்கத்தின் புதிய கமத்தொழில், உணவு உற்பத்திக் கொள்கை வீச்சுடன் இடம்பெற்றது. 2008ஆம் ஆண்டில் அடுத்த ஐந்து வருடங்களுக்கு (2009-2013) **தனது** கூட்டுத் திட்டத்தை நிறுவகத்தினால் முடிக்கக்கூடியதாகவிருந்தது. நிறுவகத்தினால் முடிக்கப்பட்ட செயற்பாடுகள் அடுத்துவரும் பக்கங்களில் சாராம்சப்படுத்தப்பட்டுள்ளது.

## ஆளுனர் சபை

| | | |
|---|---|---|
| திரு.ஜே.ரஞ்சித் விஜேதிலக்க | - | செயலாளர், கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு (2008 ஒக்ரோபரிலிருந்து) |
| திரு.ரி.எம்.அபேவிக்ரம | - | செயலாளர், கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு (2008 ஜூன் வரை) |
| திரு.வி.கே.நாணயக்கார | - | பணிப்பாளர், ஹெ.க.ஆ.ப.நி. |
| திரு.டபிள்யு.எம்.ஜயதிலக்க | - | மேலதிகச் செயலாளர், (காணிகள்), கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு |
| திரு.எம்.பி.ஹேவாவிதாரன | - | உதவிப் பணிப்பாளர், தேசிய வரவு-செலவுத் திட்டம் (2008 ஜூலையிலிருந்து) |
| திருமதி பிம்பா குணதிலக்க | - | பணிப்பாளர், தேசத்தைக் கட்டியெழுப்புதல் அமைச்சு |
| திரு.ஜி.டி.டபிள்யு.ஜயவர்தன | - | மேலதிகச் செயலாளர், பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு (2008 ஜூனிலிருந்து) |
| திரு.கே.டி.எஸ்.ருவன்சந்ர | - | சிரேஷ்ட உதவிச் செயலாளர், பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சு (2008 பெப்ரவரி வரை) |
| திருமதி மாலினி பீரிஸ் | - | செயலாளர், உயர் கல்வி அமைச்சு |
| திருமதி கமலா உயன்வத்த | - | மேலதிகச் செயலாளர், கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு (2008 பெப்ரவரியிலிருந்து) |
| திரு.டி.டி.வணிகநாயக்க | - | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் (2008 மார்ச் வரை) |
| திரு.சாம் எதிரிசூரிய | - | மேலதிகச் செயலாளர், வர்த்தக, வாணிப, பாவனையாளர் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி அலுவல்கள் அமைச்சு |
| திரு.என்.கே.ஜி.கே.நெம்மாவத்த | - | பணிப்பாளர், வர்த்தக, இறுப்புப்பட்டியல், மூலதன மேம்படுத்தல் திணைக்களம் (2008 மே வரை) |
| திரு.ரவீந்திர ஹேவாவிதாரன | - | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் (2008 ஏப்ரலிலிருந்து) |
| திரு. கே.எல்.டி சில்வா | - | சிரேஷ்ட பொருளியலாளர், இலங்கை மத்திய வங்கி |
| பேராசிரியர் புத்தி மாரம்பே | - | பீடாதிபதி, கமத்தொழில் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம் |

| | | |
|---|---|---|
| கலாநிதி சி.குடாகமகே | - | கமத்தொழில் பணிப்பாளர் நாயகம் |
| திரு.எஸ்.டி.ஏ.பீ.பொரலஸ்ஸ | - | காணி ஆணையாளர் நாயகம் |
| திரு.எச்.பி.எஸ்.சோமசிறி | - | நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்<br>(2008 ஜனவரியிலிருந்து) |
| திரு.ஏ.பி.ஜி.கித்சிறி | - | கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் |
| திரு.வசந்த ஏகநாயக்க | - | மேலதிகச் செயலாளர் (மகாவலி, ஏற்றுமதி கமத்தொழில்), கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு<br>(2008 ஜனவரி வரை) |
| திரு.பொடே சும்சிறி | - | வதிவிடப் பிரதிநிதி, உணவு விவசாயத் தாபனம்<br>(2008 ஜனவரி வரை) |
| திருமதி ஆர். டீ சில்வா | - | செயலாளர், ஆளுனர் சபை, பதிவாளர், ஹெ.க.ஆ.ப.நி. |

# கமத்தொழில் கொள்கை, கருத்திட்ட மதிப்பாய்வுப் பிரிவு

## முடிக்கப்பட்டுள்ள ஆராய்ச்சிகள்

**1. இலங்கையில் குடியேற்றத் திட்டங்களில் முறைசாரா காணிக் கொடுக்கல் வாங்கல்களும், குடியேற்ற வாசிகளின் உற்பத்தி, முதலீடு, மற்றும் வருமானம் மீதான அவற்றின் தாக்கமும்**

**இணைப்பாளர்:** திரு.ஜே.கே.எம்.டி.சந்திரசிறி

**நோக்கங்கள்:**
குடியேற்றத் திட்டத்தில் முறைசாரா காணிக் கொடுக்கல் வாங்கல்களுக்கான காரணிகளையும், குடியேற்றவாசிகளின் உற்பத்தி, வருமானம் மற்றும் சேமநலன் ஆகியன மீது அவற்றின் தாக்கங்களையும் பரிசீலிப்பதே பிரதான நோக்கமாகும். பராக்கிரம சமுத்திரம், உடவளவை, மகாவலி - 'எச்', மற்றும் கிரிந்தி ஓய ஆகிய நான்கு குடியேற்றத் திட்டங்களை ஆராய்ச்சியின் கள அளவீடு உள்ளடக்கியிருந்தது.

**முடிவுகள்**:

i. குடியேற்றத் திட்டங்களில் காணியின் முறைசாராத் தொழிற்பாடு மிகவும் பிரசித்தமான அம்சமொன்றாகும். இது தாழ்நிலங்களுக்கும், மேட்டு நிலங்களுக்கும் பொதுவானதாகும். ஆனால், முன்னையதன் மீது அதிகளவில் ஆதிக்கம் செலுத்துகின்றது. பொதுவாக, 60 சதவீதமான பள்ள நிலங்கள் முறைசாரா ஆட்சி நிலைமைகளின் கீழ் உள்ளன. ஆனால், குறிப்பாக மகாவலி 'எச்' போன்ற குடியேற்றத் திட்டங்களின் கீழ் அதிகளவில் இருந்தன. இங்கு சுமார் 73 சதவீதத்தைக் கொண்ட பள்ள நிலங்கள் முறைசாரா ஆட்சி நிலைமைகளின் கீழ் இருந்தன.

ii. பள்ள நிலங்களுக்கு மேலாக முறைசாரா ஆட்சி முறைமைகள் பன்னிலையானவை என்பதுடன், அவற்றில் சில கொடுக்கல் வாங்கல்களின் முறைசாரா முறைகள் மீதான அடிப்படையைக் கொண்டிருந்தன. அவற்றில் நிலையான உற்பத்திகள் மீது குத்தகைக்கு விடுதலும், பணத்தினதும், அடமானத்தினதும் மீது குத்தகைக்கு விடுதலும் மிகவும் பிரசித்தமானவையாகும். சட்ட ஆவணங்கள் இன்றி கொள்வனவு செய்தல் (அல்லது விற்பனை செய்தல்), அரசாங்க அல்லது தனியார் காணியை தொழிற்படுத்துவதற்கு, கூறாக்குவதற்கு, இணைந்து நிருவகிப்பதற்கு, அத்துமீறுவதற்கு சுதந்திரமாக கைமாற்றுதல் ஆகியனவே கொடுக்கல் வாங்கல்களில் ஏனைய முறைசாராரீதியில் தொழிற்படுத்தல் ஆகியனவே ஏனைய ஆட்சியுரிமை அல்லது முறைமைகளாகும்.

iii. முறைசாரா ஆட்சி முறைமைகள் அல்லது கொடுக்கல் வாங்கல்களின் முறைகள் ஆகியன பகுதியிலிருந்து பகுதிக்கு பன்னிலையானவையாகும். காணியின் வாடகை, பயிர்ச் செய்கை உரிமைகள் மற்றும் வேறு நியதிகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியன மீது அது அடிப்படையைக் கொண்டிருந்தது. கிட்டுகின்ற நீர், செய்கை பண்ணக்கூடிய பயிர்களின் வகைகள் மற்றும் பயிர்ச் செய்கை முறை, உட்கட்டமைப்பு மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகள், சமூக மற்றும் பொருளாதாரக் காரணிகள் ஆகியன போன்ற குறிப்பிட்ட சூழல் நிலைமைகளினால் இவை ஒவ்வொன்றும் உருக்கொடுக்கப்படுவதாகத் தோன்றுகின்றது. இதன் விளைவாக, வேறுபட்ட அமைவிடங்களில் ஒரு தொகையிலான முறைசாரா ஆட்சி முறைகள் நிலவின்

iv. காணியைச் செய்கை பண்ணுவதற்கு குடும்பச் சரீர உழைப்பு இன்மை, அவசரகாலங்களுக்கு பணத்தின் அவசியம், பகுதிக்கு வெளியே வாழுதல் மற்றும் காணியைப் பராமரிப்பதற்கான சாத்தியமின்மை ஆகியனவே குத்தகை முறைமைகளின் கீழ் காணிகளை கொடுக்கல் வாங்கல் செய்வதற்கான பிரதான காரணங்களாகும். அவசரகாலங்களுக்கு பணத்தின் தேவையே காணிகளை அடமானம் செய்வதற்கான பாரிய காரணமாகும். காணியைச் செய்கை பண்ணுவதற்கு குடும்பச் சரீர உழைப்பு இன்மை, குடித்தனத்தின் பழுதுபார்த்தலுக்கு பணத்தின் தேவை பணத்தின் அவசியம், உயர்ந்த பெறுமதியொன்றுக்கு அடமானத்தை மாற்றுவதற்கான

அவசியம் ஆகியனவே ஏனைய காரணங்களாகும்.

v. கடனைப் பெறுவதில் விசேடமாக, பெருமளவு முறைசாராரீதியில் தொழிற்படுகின்ற கமக்காரர்களைப் பொறுத்தளவில் காணியில் குறுகிய கால பயிர் உற்பத்தி மீதான மூலதனத்திற்காகக் காணி உரிமைகளின் அல்லது தெளிவான உரித்துறுதிகளின் இன்மையினால் பிரச்சனை ஏற்படுவதில்லை. ஏனெனில் கடனுக்கு எதிராக குழு உத்தரவாதங்களை ஏற்றுக்கொள்கின்ற கமக்காரர் வங்கி - சமுர்த்தி வங்கி மற்றும் ரஜரட்டை வங்கி போன்ற மாகாண அபிவிருத்தி வங்கிகள் ஆகியன போன்ற நுண்-நிதி நிறுவனங்களில் அவை தங்கியுள்ளன.

vi. காணி உரிமையாளருக்கும், முறைசாராரீதியில் கொடுக்கல் வாங்கலிலான பயிர்ச் செய்கையாளருக்கும் இடையிலான உறவின் வகை உற்பத்திச் செயற்பாடுகளினதும், இரு தரப்புக்களின் சமூக வாழ்க்கையினதும் மீது மோசமான தாக்கத்தினைக் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் ஒருவருக்கு ஒருவர் தெரியாதவர்களை விட நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் இடையிலேயே பெருமளவு காணிக் கொடுக்கல் வாங்கல்கள் இருந்தன.

vii. நெற் செய்கையைப் பொறுத்தளவில், பணத்தின் நிலையான உற்பத்தியின் மற்றும் அடமானம் வைத்தலின் மீது குத்தகையின் கீழான காணியின் உற்பத்தித்திறன் சட்ட உரிமையாளரினால் தொழிற்படுத்தப்படும் காணிகளின் உற்பத்தித்திறனை விட அதிகமாகும். வருமானத்தைப் பொறுத்தளவில் அதுவும் அப்படியேயாகும்.

viii. வர்த்தகக் கமத்தொழிலுக்கு மூலதனத்துடனும், விசேடமாக வாழை மற்றும் பப்பாசி போன்ற வேறு பயிர்களினுள் காணியைப் பன்னிலையாக்குவதனால் உயர்ந்த உற்பத்தித்திறனையும், இலாபங்களையும் கொண்டிருப்பதற்கு உயர் தரத்திலான தொழில்நுட்பத்துடனும் காணியினதும், நீரினதும், சரீர உழைப்பினதும் உபயோகத்தை செயற்றிறனாகவும், சக்திமிக்கதாகவும் வைத்திருப்பதற்கு முறைசாராக் காணிக் கொடுக்கல் வாங்கல்கள் ஊக்குவித்துள்ளன.

ix. காணி முகாமைத்துவத்தைக் கையாள்வதில், முறைசாரா காணி இயக்குனர்களின் வழமையான போக்கில் கமக்காரர் தாபனங்களின் முன் பயிர்ச் செய்கைச் சட்டங்களில் பங்கெடுக்கவில்லை என்பதுடன், அவற்றின் தீர்மானங்களை அல்லது பகுதியில் பயிர்ச் செய்கை அட்டவணையைப் பின்பற்றவில்லை.

x. தற்போதைக்கு மான்யத்திலான உரத்தைப் பெறுவதற்கு விண்ணப்பங்களை உறுதிப்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துடன், பயிர்ச்செய்கை மட்டத்தினதும், கமக்காரர் தாபனங்களினதும் தீர்மானங்களைப் பின்பற்றுவதற்கு முறைசாராக் காணி இயக்குனர்களை கமக்காரர் தாபனங்களினால் அழுத்தக்கூடியதாக இருந்தது.

குடியேற்றத் திட்டங்களின் காணியின் முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள் பெருமளவு அம்சங்களின் திட்டமாகத் தொழிற்படுவதனால், காணியின் கைமாற்றம் அவற்றின் கீழ் சட்டபூர்வமாக்கப்பட வேண்டும் என ஆய்வு சிபார்சு செய்கின்றது. மேலும், சம்பந்தப்பட்ட கமக்காரர் தாபனங்களின் உறுப்பினர்களாக காணியின் முறைசாரா இயக்குனர்கள் வரவேண்டும் என்பதைக் கட்டாயமாக்கப்பட வேண்டும். இதனால், அவர்களின் சட்டங்களுக்கும், ஒழுங்குவிதிகளுக்கும் அவர்கள் ஒழுகி நடக்க வேண்டும்.

## 2. கமத்தொழில் ஆராய்ச்சி, உற்பத்தி உதவியாளரின் வகிபங்கு: தற்போதைய சூழ்நிலையும், எதிர்கால பெறுபேறுகளும்

| | | |
|---|---|---|
| **ஆராய்ச்சிக் குழாம்:** | திருமதி எம்.டி. சுசீலா லூர்து | - இணைப்பாளர் |
| | திருமதி பி.ஆர்.வீரக்கொடி | - இணை ஆராய்ச்சியாளர் |
| | திருமதி ஆர்.என்.கே.ரம்புக்வெல | - இணை ஆராய்ச்சியாளர் |

**நோக்கங்கள்:**
இலங்கையில் கிராமிய மட்டத்தில் அவர்களது வகிபங்குக்கு மேலதிகமாக, கமத்தொழில் ஆராய்ச்சி, உற்பத்தி உதவியாளர்களின் ஆற்றலளவுகளையும், மட்டுப்படுத்தல்களையும் ஆய்வதே ஆய்வின் நோக்கமாகும்.

கமத்தொழில் செயற்பாடுகள் முதன்மையாகவுள்ள ஏழு மாவட்டங்களில் ஆய்வு நடத்தப்பட்டது. ஏழு மாவட்டங்களில் இருந்து 21 கமநல சேவைகள் நிலையங்கள் தெரிவுசெய்யப்பட்டதுடன், கேள்விக்கொத்து அளவீட்டில் 226 க.ஆ.உ. உதவியாளர்கள் பங்கெடுத்தனர்.

**முடிவுகள்:**

i. கமத்தொழில் செயற்பாடுகளை அமுல்படுத்துவதில் அடிமட்ட இணைப்பாளர்களாக செயற்றிறனாகவும், சக்திமிக்கதாகவும் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்காக போதியளவு கல்விசார் தகைமைகளை மாதிரி சனத்தொகையின் பெரும்பாலானோர் கொண்டிருந்தனர். மாதிரி சனத்தொகையின் சுமார் 96 சதவீதத்தினர் க.ஆ.உ. உதவியாளர்களுக்கான குறைந்தபட்சமான அவசியப்பட்ட கல்விசார் தகைமைகளை நிறைவேற்றினார்கள்.

ii. நீண்ட காலப் பயிற்சிகளைப் பொறுப்பேற்பதற்கு மாதிரி சனத்தொகையின் 24.3 சதவீதத்தினர் வாய்ப்பொன்றைக் கொண்டிருந்தனர். மாதிரியில் நீண்ட கால பயிற்சிகளைக் கொண்டிருந்த க.ஆ.உ. உதவியாளர்கள் பயிற்றுவிக்கப்படாதோர்களை விட உயர்வான செயற்றிறன்களைக் காட்டினார்கள்.

iii. கிராமிய மட்டத்தில் முக்கியமான உத்தியோகத்தர்களாக க.ஆ.உ. உற்பத்தியாளர்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும். பிறவற்றுள் அவர்களின் நியமனத்தின்தன்மை, குறைந்த கல்விசார் தகைமைகள் மற்றும் தொழிலின் பதவிப்பெயர் ஆகிய காரணங்களின் நிமித்தம் அவர்கள் உரிய அங்கீகாரத்தை இனிமேல் தான் பெறவேண்டியுள்ளது.

iv. க.ஆ.உ. உதவியாளர்களின் கடமைப் பட்டியலில் அரசாங்கத்தின் புதிய திட்டங்களை அமுல்படுத்துவதற்கே ஆகக்கூடுதலான முன்னுரிமை வழங்கப்பட்டது. விஸ்தரிப்புச் சேவைகளை அவர்கள் வழங்குவதில்லை. ஆனால், கமத்தொழில் அபிவிருத்திச் செயற்பாடுகளில் கிராமிய மட்ட ஒருங்கிணைப்பாளர்களாகச் செயற்படுகின்றார்கள்.

v. க.ஆ.உ. உதவியாளர்களுக்கு 58 கடமைகள் குறித்தொதுக்கப்பட்டுள்ளன. அவை தன்மையில் மிகவும் சிக்கலானவையாகும். எனவே, கடமைகளின் தன்மையையும், பரப்புரையையும் வரையறுப்பது மிகவும் கஷ்டமானதாகும். க.ஆ.உ. உதவியாளர்களின் செயற்றிறனை மதிப்பிடுவதும் கஷ்டமானதாகும்.

vi. பால்நிலையின் பிரகாரம் மிகவும் குறைந்த மாறல்கள் உள்ளன. ஆனால், பெண் க.ஆ.உ. உதவியாளர்கள் மட்டுமே போக்குவரத்து கஷ்டங்களை எதிர்நோக்கினார்கள்.

vii. க.ஆ.உ. உதவியாளர்களின் (அதாவது 75 சதவீதம்) பெரும்பான்மையானோர் நடுத்தர மட்டத்திலான தொழில் திருப்தியைக் கொண்டுள்ளதுடன், தொழில் அதிருப்தியின் மட்டம் தொழில் செயல்நோக்கத்தின் மட்டத்தை விட சார்புரீதியில் உயர்வானதாகும்.

viii. கிராமிய கமத்தொழில் துறையை விருத்தி செய்வதற்கு க.ஆ.உ. உதவியாளர்களின் சேவைகளைப் பயனுறுதிவாய்ந்ததாகவும், செயற்றிறனாகவும், அத்துடன் சிறப்பானதாகவும், பலமான மனித மூலவளங்களாகவும் பயன்படுத்த முடியும்.

க.ஆ.உ. உதவியாளர்களின் கடமைகளின் பட்டியலை மீள் ஒழுங்குபடுத்தப்படுவதை ஆய்வு விதந்துரைக்கின்றது. நாட்டின் கிராமிய கமத்தொழில் அபிவிருத்திக்கான ஆகக்கூடுதலான நன்மையைப் பெறுவதற்காக அவர்களது கடமைப் பட்டியலில் இருந்து கிராமிய விஸ்தரிப்பு விடயத்தை அகற்ற வேண்டுமெனவும், ஒரு வருட கமத்தொழில் பயிற்சி நெறியொன்றை அவர்கள்

கடைப்பிடிப்பதைக் கட்டாயமாக்கி வசதிப்படுத்துனர்களாக அவர்களை அங்கீகரிக்க வேண்டுமெனவும் அத்துடன் தோதான மதிப்பாய்வு மற்றும் பதவியுயர்வு திட்டமொன்றையும், பொருத்தமான இடமாற்றத் திட்டமொன்றையும் அறிமுகப்படுத்த வேண்டுமெனவும் அவர்களை அங்கீகரிக்கின்றது.

## 3. பாற்பண்ணை கிராம அபிவிருத்திக் கருத்திட்டத்தின் நடுத்தவணை மதிப்பாய்வு

**ஆராய்ச்சிக் குழாம்:** செல்வி எச்.எம்.எஸ்.ஜே.எம்.ஹிட்டிஹாமு - இணைப்பாளர்
திரு.எஸ்.அபாசிங்க - இணை ஆராய்ச்சியாளர்

**நிதிப்படுத்தலின் மூலம்:** கால்நடை அபிவிருத்தி அமைச்சு

**நோக்கம்:**
கருத்திட்ட நோக்கங்களைச் சாதிப்பதற்கு அமுல்படுத்தப்படும் மூலோபாயங்களின் பிரச்சனைகள், மட்டுப்படுத்தல்கள் மற்றும் பயனுறுதிவாய்ந்த தன்மை ஆகியவற்றைப் பரிசீலிப்பதற்கு மேலதிகமாக பாற்பண்ணைக் கிராம அபிவிருத்திக் கருத்திட்டத்தின் (பா.கி.ஆ.க.) நோக்கங்களின் சாதனையின் மட்டத்தை ஆய்வதற்கு ஆய்வு முயலுகின்றது. கருத்திட்டத்தை அதிகளவு வெற்றிகரமாக்குவதற்கு அவசியமான கொள்கை வழிகாட்டல்களை வழங்குதல் நோக்கத்தின் அங்கமாகும். கால்நடை அபிவிருத்தி அமைச்சினால் தாபிக்கப்பட்ட பாற்பண்ணை கிராமங்கள் உள்ள 10 மாவட்டங்களில் ஆய்வு நடத்தப்பட்டது. பா.கி.ஆ.க.இன் அமுலாக்கல் ஆண்டைக் கருத்திற்கெடுக்கையில் (2004 மற்றும் 2005) ஆய்வுக்காக 30 பாற்பண்ணைக் கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டதுடன் கட்டமைக்கப்பட்ட கேள்விக்கொத்தைப் பயன்படுத்தி 293 கமக்காரர்கள் நேர்முகங்காணப்பட்டார்கள். ஆய்வுக்காக இரண்டாம்பட்ச மூலவளங்களிலிருந்து தகவல் பயன்படுத்தப்பட்டது.

**முடிவுகள்:**

i. பா.கி.ஆ.க.இன் அமுலாக்கத்தின் பின்னர், பசுப்பால் மற்றும் எருமைப்பால் உற்பத்தி அதிகரித்துள்ளது. சராசரி உற்பத்தி 16.01 லீ./தினம்/கமக்காரரிலிருந்து 19.9லீ./தினம்/கமக்காரர் என அதிகரித்துள்ளது. புத்தளம் மாவட்டத்தில் ஆகக்கூடுதலான உற்பத்தி அவதானிக்கப் பட்டுள்ளதுடன், அதிகரிப்பு நாளொன்றுக்கு 18.6 லீட்டரிலிருந்து நாளொன்றுக்கு 31.6 லீட்டராகும். இது அடிப்படையில் பா.கி.ஆ.க.இன் கீழ் உள்ளீட்டின் வெற்றிகரமான விநியோகத்தினதும், மாவட்டத்தில் உயர் விளைச்சலிலான இனங்களை நிருவகிப்பதனதும் காரணமேயாகும். ஆய்வுப் பகுதியில் சகல மாவட்டங்களிலும் பால் உற்பத்தி அதிகரித்துள்ளது. பால் உற்பத்தியின் மொத்த மேம்படுத்தல் 24 சதவீதமாகும். எனவே இலங்கையில் பாற்பண்ணைக் கைத்தொழிலின் மேம்படுத்தலுக்கு பா.கி.ஆ.க. ஒரு மிகவும் முக்கியமானதும், பெறுமதிமிக்கதுமான திட்டமாகும். இக் கருத்திட்டம் உற்பத்திச் செயற்றிறனையும், கிராமிய சிறு அளவிலான பாற்பண்ணை கமக்காரர்களின் குடும்ப வருமானத்தையும் உயர்த்துகின்றது.

ii. கருத்திட்டத்தின் பயனுறுதிவாய்ந்த தன்மையின் காரணமாக, பாலின் நுகர்வு 1.06 லீ./ தினம்/குடித்தனத்திலிருந்து 1.10 லீ./தினம்/குடித்தனத்திற்குச் சிறிதளவு அதிகரித்துள்ளது. கருத்திட்டத்தின் அமுலாக்கத்தின் பின் உடன்பாலைப் பருகும் குடித்தனங்களின் மொத்த எண்ணிக்கை 67.2 சதவீதத்திலிருந்து 71.33 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது. ஆய்வுப்பகுதியில் வேறுபட்ட மாவட்டங்களில் கமக்காரர்கள் மத்தியில் உடன்பால் நுகர்வில் சிறிதளவு மேம்பாடு காட்டப்பட்டுள்ளது. பால் நுகர்வின் தொகை ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பாரிய அளவுக்கு அதிகரித்துள்ளது (0.21 லீட்டர்களிலிருந்து 1.09 லீட்டர்களுக்கு). பாற்பண்ணை கமக்காரர்கள் மத்தியில் உடன்பாலின் நுகர்வு கருத்திட்டத்தின் படி எதிர்பார்க்கப்பட்டதை விட குறைவானதாகும். இளம் சந்ததியினரில் ஏற்பட்ட அலர்ஜியே உடன் பாலின் குறைந்தளவு நுகர்வுக்கான காரணமாகும் என கமக்காரர்கள் குறிப்பிட்டனர்.

iii. கருத்திட்டத்தின் கீழ், எதிர்பார்க்கப்பட்டவாறு பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தியில் கமக்காரர்கள் அக்கறையை எடுக்கவில்லை.

iv. பாற்பண்ணைத் துறையில் வருமானம் தோற்றுவிக்கும் செயற்பாடுகளின் பரந்த பரப்புரையொன்று உள்ள போதிலும், கமக்காரர்கள் கவனத்தை வழங்கவில்லை.

v. ஆய்வுப்பகுதியில் கருத்திட்டத்தின் கீழ் கருத்திட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 18 மூலோபாயங்களில் 10 மூலோபாயங்கள் அமுல்படுத்தப்பட்டதுடன், எதிர்காலக் கருத்திட்டங்களில், வேறு மூலோபாயங்களையும் அமுல்படுத்துவது முக்கியமானதாகும்.

vi. மூலவுயிருருரீதியில் திருந்திய உயர் உற்பத்தியிலான விலங்கினைக் கொள்வனவு செய்வது ஆய்வுப் பகுதியில் பாற்பண்ணை கமக்காரர்களுக்கு மிகவும் கஷ்டமான பணியாகும் என்பதை ஆய்வுத் தகவல் நிரூபித்தது. தற்போது ஆரோக்கியமானதும், உயர் உற்பத்தியிலானதுமான விலங்கொன்றை மூலவுயிருரு செயற்றிறன் மீது சிறிய மேம்படுத்தல்களுடன் சூழவுள்ள பகுதியிலிருந்து அதை அவர்கள் வாங்க வேண்டியுள்ளது.

குறிப்பான பகுதிகளில் மிருக வைத்திய நிபுணர் அலுவலகத்தின் மேற்பார்வையின் கீழ் தனியார் துறை வளர்ப்பு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என ஆய்வு விதந்துரைக்கின்றது. பிறவற்றுள், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களின் பங்கெடுப்புடன் மாதமொன்றுக்கு கமக்காரர் நிருவாகத்திலான சங்கங்களின் கூட்டங்களை நடத்துதல், பாற்பண்ணைக் கைத்தொழிலுக்கு புதிய கமக்காரர்களை கவர்வதற்கு பின்தொடர் திட்டங்களையும், கடன் திட்டங்களையும் அறிமுகப்படுத்தல், இளம் சந்ததியினருக்கு புதிய தொழில்நுட்பத்தை பரப்புதல், இலத்திரனியல் ஊடகத்தைப் பயன்படுத்தி உடன் பாலின் முக்கியத்துவத்தை அறியச் செய்தல், உடன் பாலின் நுகர்வு பற்றி மக்களின் மனோநிலையை மாற்றுவதற்கு தேசிய மற்றும் பிராந்திய பயிற்சியை நடத்துதல் மற்றும் உடன் பாலினால் விளைவிக்கப்படுகின்ற அலர்ஜிகளுக்கு தீர்வுகளைக் கண்டறிதல் என அது விதந்துரைத்துள்ளது.

## 4. "கமநெகும திட்டத்தின்" கீழ் இபலோகம பிரதேச செயலாளர் பிரிவில் முச்சகம கிராமத்தில் செயல் ஆராய்ச்சி

**ஆராய்ச்சி குழாம்:** திரு.ஆர்.எல்.என்.ஜயதிஸ்ஸ - இணைப்பாளர்
திரு.எம்.எ.சி.எஸ்.பண்டார - இணை ஆராய்ச்சியாளர்

இலங்கையின் உலர் வலயத்தில் குள-அடிப்படையிலான கமநல சங்கங்களின் கமத்தொழில் உற்பத்தியையும், சமூக-பொருளாதார நிலைமைகளையும் மேம்படுத்துவதற்கு பாடங்களையும், வழிகாட்டல்களையும் கற்பதற்கு கமநெகும கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இத் திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

**நோக்கங்கள்:**

i. மக்களின் உற்பத்தித்திறனையும், வருமானத்தையும் மற்றும் தொழிலையும் அதிகரிப்பதற்கு கிராமத்தில் கிட்டுகின்ற மூலவளங்களின் உபயோகத்தை மேம்படுத்துதல்;
ii. அதிகளவு விளைவிலான பொருளாதாரச் செயற்பாடுகளுக்கு மக்களை ஒன்றுதிரட்டுவதற்காக சிறந்த முறைகளையும், பொறிமுறைகளையும் பரிசீலித்தல்;
iii. பொருளாதாரச் செயற்பாடுகளில் பெண்களின் சம்பந்தத்தை முன்னேற்றுதல்;
iv. திட்டமிடுதலுக்கும், அமுலாக்குவதற்கும், கண்காணிப்பதற்குமான பொறுப்பினை எடுப்பதற்கு நிலைத்திருத்தல் பகுதி - அடிப்படையிலான தாபனரீதியான பொறிமுறையொன்றைத் தாபிப்பதை ஆய்வுசெய்தல்;
v. அபிவிருத்திச் செயற்பாடுகளை மதிப்பாய்தல், கிராமத்திற்கும் வெளியிடத்திற்கும் இடையில் தொடர்புகளைக் கட்டியெழுப்புதலும்.

**அமுல்படுத்தப்பட்ட செயற்பாடுகளும், கற்கப்பட்ட பாடங்களும்**

திட்டத்தின் கீழ், கருத்திட்டப் பகுதியின் பிரிவுச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு தாபனரீதியிலான பொறிமுறையொன்று அமைக்கப்பட்டது. மாகாண சபையையும், மாவட்டத்தின் கமத்தொழில் சேவைகளை வழங்கும் வேறு முக்கியமான முகவராண்மைகளையும்

பிரதிநிதிப்படுத்தும் முக்கிய அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருந்தனர். வீட்டுத் தோட்டங்களினதும், நெல் வயல்களினதும் உற்பத்தித்திறனை முன்னேற்றுவதற்காக கிராம மக்களின் பங்கெடுப்புடன் செயல்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டது.

திட்டத்தின் அங்கமாக, யாய மாதிரியொன்றாக, 42 ஏக்கர்களைக் கொண்ட பயிர்ச் செய்கைக்காக 34 கமக்காரர்கள் மத்தியில் 80 புசல்களைக் கொண்ட புதிய விதை நெல் வர்க்கம் (BG-358) பங்கிடப்பட்டது. விதையின் மொத்த ஆகுசெலவு ரூபா 52,325 என்பதுடன், இதில் ரூபா 32,325 கருத்திட்ட நிதியங்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மீதி கமக்காரர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மொத்தத் தொகை அறவிடப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் கடன் தேவைகளை விடுவிப்பதற்காக சுழற்சி நிதியமொன்றாகப் பயன்படுத்தப்பட்டது.

வீட்டுத் தோட்டங்களை விருத்தி செய்வதற்கு மண் பானைகளுடன் (உள்ளே நீரை சேமித்து வைப்பதற்கு) 265 மாமரக் கன்றுகளை (கறுத்தக் கொழும்பான்) பங்கிட்டமையே அமுல்படுத்தப்பட்ட இன்னொரு செயற்பாடாகும். அவற்றை மக்கள் வெற்றிகரமாக செய்கை பண்ணியுள்ளதுடன், எதிர்காலத்தில் விளைச்சலில் இருந்து அவர்களால் பயனடைய முடியும்.

தாவரங்களினால் மூடப்பட்டிருந்த பிரதான கிராமக் குளத்தைப் புனரமைப்பதற்கு ரூபா 287,121 கொண்ட தொகையொன்றை ஹெ.க.ஆ.ப.நி. செலவழித்த அதேவேளை, வட மத்திய மாகாண கமத்தொழில் அமைச்சு ரூபா 47,495ஐச் செலவழித்தது. கிராமவாசிகள் தமது சரீரஉழைப்பினை பங்களித்தனர். முழு அப்பியாசத்திற்கும் மதிப்பிடப்பட்ட மொத்தப் பெறுமதி ரூபா 1 மில்லியனாகும். ஆனால், உண்மையாகச் செலவழிக்கப்பட்ட தொகை ரூபா 334,616 ஆகும். இது இக் கருத்திட்டத்தினால் கற்கப்பட்ட நல்லதொரு பாடமாகும்.

பொருளாதார அபிவிருத்திக்கு பெண்களை முன்னேற்றுவதற்கான நோக்கத்தின் கீழ், வட மத்திய மாகாண சபையின் சிறிலியக்க சவிய என்ற வீட்டுத் தோட்ட அபிவிருத்தித் திட்டத்திலிருந்து அவர்கள் நன்மையடைவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன. ஆலோசனைச் சேவைக்கு மேலதிகமாக, அதன் மூலம் விதைகள் பங்கிடப்பட்டன.

கருத்திட்டத்திலிருந்து கற்கப்பட்ட ஏனைய பாடங்கள் வருமாறு: (அ) கிராம அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு செயற்கை சினைப்படுத்தலின் தீவிரமான சேவையை எடுப்பதற்கான சாத்தியக்கூறு. இல்லாதுவிடில், செயற்கை சினைப்படுத்தல் சேவையைப் பெறுவது இலகுவானதல்ல. ஏனெனில் அவரது வீச்செல்லை ஒரு தொகைக் கிராமங்களை அடக்குகின்றது. (ஆ) தமது சொந்த அபிவிருத்திச் செயற்பாடுகளில் பங்கெடுப்பதற்கு கிராம மக்கள் பற்றி சில உறுதியான அம்சங்களை ஆராய்ச்சிக் குழாம் அடையாளங் கண்டுள்ளது. கருத்திட்டத்தின் அமுலாக்கத்திற்கு முன்னர், கிராம அபிவிருத்தியில் மக்களின் பங்கெடுப்பினைப் பொறுத்தளவில் பின்தங்கிய கிராமமொன்றாக இக்கிராமம் கருதப்பட்டுள்ளது.

## 5. மலைநாட்டு மரக்கறி பண்ணைத் தொழில் முறைமையில் பேணல் பண்ணைத் தொழில் தொழில்நுட்பங்களின் பரம்பல்

**ஆராய்ச்சிக் குழாம்:** திருமதி ஷாமினி கே.குமார - இணைப்பாளர்
திருமதி பி.ஆர்.வீரக்கொடி - இணை ஆராய்ச்சியாளர்

மலைநாட்டு மரக்கறி பண்ணைத்தொழில் முறைமையில் (UPVEGSYS) சூழல் கரிசனைகள் மீது கமக்காரர்களின் அறிவையும், பேணல் விருப்புக்களை நோக்கி அவர்களது பதிலிறுப்பையும் மதிப்பிடுவதே ஆய்வின் பிரதான நோக்கமாகும்.

ஆய்வின் பிரதான நோக்கத்திற்கு அமைவாக, ''மலைநாட்டு மரக்கறி உற்பத்தியில் இயற்கை மூலவள முகாமைத்துவ மனத்தோற்றப்பாடுகள்: கமக்காரர்களின் அறிவு, போக்குகள் மற்றும் பதிலிறுப்புக்கள்'' என்ற தலைப்பில் ஆறு அத்தியாயங்களினுள் இறுதியான வரைவு அறிக்கை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இதை அறிமுகமொன்றும், அறிக்கையின் இலக்கிய அளவீடு

UPVEGSYSஇல் முக்கியமான சூழல் கரிசனைகளின் அளவீட்டினையும், அதன் நிலைத்திருத்தல் தன்மையை நோக்கி ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆராய்ச்சி மற்றும் விஸ்தரிப்பு முயற்சிகளையும் தொடருகின்றது. மேலும், கண்டி, மாத்தளை, பதுளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட மாதிரி சனசமூகத்தின் பண்ணைத் தொழில் முறைமையின் பௌதீக பங்கீட்டினதும், சமூக-பொருளாதார குணவியல்புகளினதும் விவரணத்தை அறிக்கை அடக்கியுள்ளது.

பேணல் பண்ணைத்தொழில் தொழில்நுட்பங்களினதும், மண்ணின் சீர்கேடு, பூச்சிநாசினி மாசுபடுத்தல் மற்றும் உர மாசுபடுத்தல் ஆகிய UPVEG SYSஇல் மூன்று பாரிய சூழல் கரிசனைகளுக்கு குறிப்பிட்ட மேற்கோளுடன் இதை நோக்கிய அவர்களின் பதிலிறுப்பினதும் மீது கமக்காரர் விழிப்பியலை உயர்த்துவது மீதான முயற்சிகளை ஆய்வு முடிவுகள் உள்ளடக்குகின்றன.

காலநிலை நிலைமைகளினால் ஆதரவளிக்கப்பட்ட மலைநாட்டு மரக்கறி உற்பத்தியின் போட்டிக்குரியதும், ஆகுசெலவு விளைவிலானதன்மையினதும் காரணமாக கடந்த அரை நூற்றாண்டாக UPVEGSYSஇல் புறநீங்கலான வளர்ச்சி இடம்பெற்றுள்ளதாக ஆய்வு முடிக்கின்றது.

## 6. தேசிய உணவு உற்பத்தி இயக்கத்தின் ஆய்வு/ அபி வவமு ரட்ட நகமு திட்டம்

| | | |
|---|---|---|
| **ஆராய்ச்சிக் குழாம்:** | திரு.ஜே.கே.எம்.டி.சந்திரசிறி | - இணைப்பாளர் |
| | கலாநிதி எல்.பி.ரூபசேன | - ஆலோசகர் |
| | கலாநிதி டபிள்யு.எம்.ஜி.பீ.கிராகம | - இணை ஆராய்ச்சியாளர் |
| | திரு.எஸ்.அபாசிங்க | - இணை ஆராய்ச்சியாளர் |
| | திரு.எச்.எம்.ஜே.கே.ஹேரத் | - இணை ஆராய்ச்சியாளர் |
| | செல்வி எச்.எம்.எஸ்.ஜே.எம். ஹிட்டிஹாமு | - இணை ஆராய்ச்சியாளர் |
| | செல்வி எம்.கே.என்.தமயந்தி | - இணை ஆராய்ச்சியாளர் |
| | திருமதி எம்.டி.சுசீலா லூர்து | - இணை ஆராய்ச்சியாளர் |

வீட்டுத் தோட்ட அபிவிருத்தி அம்சத்தை மதிப்பிடுவதற்கு ஆய்வு முயல்கின்றது. இது கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சின் *அபி வவமு, ரட்ட நகமு* திட்டத்தின் கீழ் நாட்டின் உள்ளூர் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு பின்பற்றப்படும் பிரதான மூலோபாயங்களில் ஒன்றாகும். ஆய்வின் பிரதான நோக்கங்கள் வருமாறு: திட்டத்தின் அமுலாக்கல் முன்னேற்றத்தைப் பரிசீலித்தல், திட்டத்தின் தேசிய நோக்கங்களைச் சாதிப்பதற்கு வீட்டுத் தோட்ட அபிவிருத்தி அம்சத்தின் பங்களிப்பின் மட்டத்தை ஆய்தல், அதை மிகவும் புத்திசாலித்தனமானதன்மையொன்றில் அமுல்படுத்துவதற்கு பெறுமதிமிக்க விதந்துரைப்புக்களைச் செய்தல்.

**முடிவுகள்:**

i. 80 சதவீத்திற்கு மேற்பட்ட இலக்குப்படுத்தப்பட்ட வீட்டுத் தோட்டங்கள் தாபிக்கப்பட்டதுடன், இந்த உயர்வான முன்னேற்றத்திற்கு உத்தியோகத்தர்களின் ஆர்வம் பாரிய காரணமாக இருந்தது.

ii. திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட புதிய வீட்டுத் தோட்டங்கள் புறநீங்கலாக மூன்றில் இரண்டுக்கு மேற்பட்ட வீட்டுத் தோட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. கண்டி மற்றும் பொலன்னறுவை ஆகியன உட்பட பெருமளவு மாவட்டங்களில் பெரும்பாலான வீட்டுத் தோட்டங்களின் முன்னரேயே விருத்தி செய்யப்பட்ட நிலைமையே இதற்கான பாரிய காரணமாகும். சேனை பயிர்ச்செய்கை பிரசித்தமான அனுராதபுரம் மற்றும் ஹம்பாந்தோட்டை போன்ற சில மாவட்டங்களில் நகர மற்றும் கிராமியப் பகுதிகளில் புதிய வீட்டுத் தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

iii. உத்தியோகத்தர்களின் முயற்சி, விதைகளின் இலவசமான விநியோகம், பயிற்சி வகுப்புக்களை நடத்துதல், பிரசித்தப்படுத்தல் மற்றும் உணவு விலைகளின் அதிகரிப்புகள் ஆகியன கிராமிய மற்றும் நகரப் பகுதிகளில் புதிதாக வீட்டுத் தோட்டங்களை விரும்பி செய்வதைப் பாதித்தன.

iv. வீட்டுத் தோட்டத்திலிருந்து மரக்கறிகளில் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான மக்களை ஊக்குவிப்பதற்கான நோக்கத்தைச் சாதிப்பதற்கு கிராமிய மற்றும் நகரப் பகுதிகளில் வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களினால் மரக்கறிகளின் செய்கை திருப்திகரமாகப் பங்களிக்கப்பட்டுள்ளது.

v. பெருமளவு கிராமிய மற்றும் நகர வீட்டுத் தோட்டச் செய்கையாளர்கள் தமது செய்கைகளில் மாட்டுச் சாணம்/விலங்குச் சாணம் மற்றும் கலவைப் பசளை ஆகியவற்றைப் பயன்படுத்தியுள்ளதுடன், பூச்சி மற்றும் கிருமித் தாக்குதல்களைத் தடுப்பதற்காக பாரம்பரியமான முறைகளையும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அவர்கள் கலவைப் பசளை குளியையும்/ குவியலையும் தோண்டியுள்ளார்கள். நச்சுத்தன்மையிலான மூலக்கூறுகள் இன்றி சேதன உரத்தையும், கமத்தொழில் உற்பத்தியையும் முன்னேற்றுதல் போன்ற வீட்டுத் தோட்ட அபிவிருத்தி மூலக்கூற்றின் சில சாதிக்கப்பட்ட நோக்கங்களின் வெற்றியைக் காட்டுவதற்கான எடுத்துக்காட்டல்களே இவையாகும்.

vi. கிராமிய வீட்டுத் தோட்டத்திலிருந்து 210 கிலோ கிராம்களைக் கொண்ட உற்பத்தியையும், நகர வீட்டுத் தோட்டமொன்றிலிருந்து 120 கிலோ கிராம்களைக் கொண்ட உற்பத்தியையும் கொண்ட தொகையொன்று பதிவு செய்யப்பட்ட அதேவேளை, வீட்டின் நுகர்வுக்கு உற்பத்தியில் 75 சதவீதத்திற்கு மேற்பட்டதை சகல வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களில் 70 சதவீத்தினர் பயன்படுத்தினார்கள்.

vii. விலைகளின் அதிகரிப்பின் காரணமாக விதைகளையும், பயிரிடல் திரவியங்களையும் பெறுவதற்கான இயலாமையே கிராமிய வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களினால் முகம் கொடுக்கப்பட்ட பாரிய பிரச்சனையாகும்.

வீட்டுத் தோட்ட திட்டத்தின் விஸ்தரிப்புக்கான சிபார்சுகள் வருமாறு: வீட்டுத் தோட்ட அபிவிருத்தி பற்றி க.ஆ.உ. உதவியாளர்களின் அறிவை முன்னேற்றுதல், க.ஆ.உ. உதவியாளர்கள் ஊடாக வீட்டுத் தோட்ட அபிவிருத்தி பற்றி மக்களுக்கு அவசியமான ஆலோசனையை வழங்குதல்; விதைகளை இலகுவாகக் கிட்டச் செய்வதன் மூலம் வீட்டுத் தோட்ட அபிவிருத்திக்கு மக்களை ஊக்குவித்தல்.

**நடந்து கொண்டிருக்கும் ஆய்வுகள்**

1. இலங்கையில் கமத்தொழில், கமநல உருமாற்றம்
2. இலங்கையில் ஈரநிலத்தில் செய்கை பண்ணப்பட்ட நெற்காணிகளின் குறைப்பின் தாக்கம்
3. கமத்தொழிலில் பெண்களின் வகிபங்கின் இடஞ்சார்ந்ததும், லௌகீகமானதுமான மாறல்கள்
4. இலங்கையில் வறுமை சார்பு கொள்கையை வகுத்தமைத்தல் கலந்தாய்வு
5. இயக்கிகளையும், ஆற்றலளவுகளையும், மட்டுப்படுத்தல்களையும் பற்றிக் கொள்வதற்கு புல்எலிய கிராமத்தின் மீள் ஆய்வு: அடிமட்டத்தில் கமநல, கமத்தொழில் உருமாற்றம்
6. பாரம்பரிய உணவு-அடிப்படையிலான உற்பத்தியை விருத்தி செய்வதற்கு உணவு நுகர்வு முறைகளையும், போஷாக்கினை முன்னேற்றுவதற்கான சந்தைப்படுத்தல் கொள்கைகளையும் ஆய்வு செய்தல்; உணவுப் பழக்கவழக்க மாற்றங்களுக்கும், இலங்கையில் அரிசி நுகர்வு மீதான அதன் தாக்கத்திற்குமான விசேட மேற்கோள்
7. இலங்கையில் சிறிய பண்ணைத்தொழில் துறைகளின் வர்த்தகத்தின் மாற்றமடையும் பதங்கள்
8. இலங்கையில் கிராமிய அபிவிருத்தி: இயக்காற்றலும், மனவுணர்வுகளும்

## சூழல், நீர் வளங்கள் முகாமைத்துவப் பிரிவு

**முடிக்கப்பட்ட செயற்பாடுகள்**

**1. இலங்கையில் வேறுபட்ட துறைகள் மீது நீரின் ஒதுக்கீடு: அனுபவங்களின் பாடங்கள்**

**ஆராய்ச்சிக் குழாம்:** திரு.எம்.எம்.எம்.அஹியார் - இணைப்பாளர்
திரு.வி.கே.நாணயக்கார - இணை ஆராய்ச்சியாளர்
திரு.எம்.எ.சி.எஸ்.பண்டார - இணை ஆராய்ச்சியாளர்

நாட்டில் வேறுபட்ட துறைகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நீரின் ஒதுக்கீட்டில் பொறிமுறைகளிலிருந்து முன்னைய அனுபவங்களையும், பாடங்களையும் பகுப்பாய்வதே ஆய்வின் பிரதான நோக்கமாகும். துருவில, கல்தோட்ட மற்றும் லுணுகம்வெஹர ஆகிய மூன்று தெரிவுசெய்யப்பட்ட அமைவிடங்கள் மீது ஆய்வு தளத்தைக் கொண்டிருந்தது.

**மூன்று விடய ஆய்வுகளின் முடிவுகள்:**

**துருவில விடய ஆய்வு:**

i. கருத்திட்டத்தின் ஆரம்பக் கட்டத்தின் போது அதன் குடிநீர் கிராக்கிக்கு ஈடு செய்வதற்காக அனுராதபுரம் நகரத்திற்கு துருவில குளத்திலிருந்து நீரை திசைமாற்றுவதற்கு துருவிலவில் உள்ள கிராமவாசிகள்/கமக்காரர்கள் உடன்படவில்லை. ஆனால், அவர்களின் முடிவு பின்னர் மாற்றமடைந்தது.

ii. கமக்காரர்கள் மத்தியில் குடிநீர் கருத்திட்டம் பற்றி விழிப்பியலை உருவாக்குவதற்கு சக்திமிக்க இயக்கத்தை கருத்திட்டம் கொண்டிருக்கவில்லை. இதன் விளைவாக, கமக்காரர்கள் மத்தியில் நம்பிக்கையீனத்தையும், எதிர்ப்பினையும் உருவாக்கியது.

iii. பயனாளிகளுக்கு (அதாவது பொருளாதார மற்றும் சமூக சேமநலனை மேம்படுத்தல்) குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்கள் மத்தியில் கணிசமானளவு அனுகூலங்களை குடிநீர் கருத்திட்டம் அளித்துள்ளது.

iv. கமத்தொழில் உற்பத்தியினதும், உற்பத்தித்திறனினதும் மீது ஏதாவது மறுதலையிலான தாக்கத்தை அது கொண்டிருக்கவில்லை.

v. வேறுபட்ட துறைகள் மத்தியில் நீர் ஒதுக்கீடு மீது இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தத்துவங்கள் இருக்கவில்லை; ஆனால் எழுந்தமான தீர்மானமே இருந்தது.

**கல்தோட்ட விடய ஆய்வு:**

i. கல்தோட்ட நீர்ப்பாசன திட்டத்தின் (க.நீ.தி.) கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட நீர்-பரிமாறிக்கொள்ளும் ஒழுங்கானது சமனலவெவ நீர்த்தேக்கத்தின் நிருமாணத்தின் பின்னர் கமத்தொழிலுக்கும், நீர்சக்தியின் தோற்றுவிப்பின் க.நீ.தி.இன் பிரதான நோக்கத்திற்கும் இடையில் அக்கறையின் மோதல் இருந்த போதிலும், வரண்ட காலங்களின் போது கமக்கரர்கள் மீது திட்டமான தாக்கமொன்றை செய்துள்ளது.

ii. மேலும், கமக்காரர்களின் போக்குகளை மாற்றுவதற்கும், நடைமுறையிலான முறைமையை செயற்றிறனாக மேம்படுத்துவதற்கும் கடுமையான நீர் முகாமைத்துவக் கொள்கையொன்றின் அவசியத்தை திட்டம் வலியுறுத்துகின்றது.

iii. சமூக-கலாசாரக் காரணங்கள், குடித்தன மட்டத்தில் நஷ்டஈட்டினை நிருவகிப்பதன் பிரச்சனைகள், குத்தகைக் கமக்காரர்களுக்கு வருமானமின்மை மற்றும் தமக்கு வேண்டிய சரீர உழைப்பை கேள்வுக்கு எடுப்பதற்கு வாய்ப்புக்கள் தடைப்பட்டதன் காரணமாக சிறிய காணி உரிமையாளர்களுக்கு போதிய வருமானமின்மை ஆகியவற்றின் காரணமாக 1997இல் இலங்கை மின்சார சபையின் நஷ்டஈட்டுத் திட்டத்தை கமக்காரர்கள் நிராகரித்தார்கள் என்பதை ஆய்வு வெளிப்படுத்துகின்றது.

**லுணுகம்வெஹர விடய ஆய்வு:**

i. பாரம்பரியமான நீர்ப்பாசனக் குளங்களினதும், தடாகங்களினதும் அழிவின் காரணமாகவன்றி, ஆனால், 'புதிய திட்டப்' பகுதிகளுக்கு லுணுகம்வெஹர நீர்த்தேக்கத்தின் 70 சதவீதத்தைக் கொண்ட நீருக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமையின் காரணமாக லுணுகம்வெஹர கருத்திட்டத்தின் 'பழைய திட்டப்' பகுதியில் கமக்காரர்கள் பாதிப்படைந்தனர்.

ii. கருத்திட்ட மதிப்பீட்டினால் கால்நடை வியாபார முயற்சி அங்கீகரிக்கப்படவில்லை என்பதுடன், KOISPஇன் பிரதான உந்துகை பாசனத்திலான கமத்தொழிலுக்காகும். விலங்குகளின் அடிப்படைத் தேவைகளை உதாசீனம் செய்து பயிர்நிலத்தினுள் கால்நடை வளர்ப்புக்காக பாரம்பரியரீதியாக பயன்படுத்தப்படும் வன புதர் நிலங்களை கருத்திட்டம் மாற்றியமைத்துள்ளது. வட்டகை மட்டத்தில் காணியினதும், நீர் வளங்களினதும் பல்தன்மையிலான உபயோகத்தை அங்கீகரிக்காமல் விடுவதற்கான தெளிவான உதாரணமொன்றாகும்.

iii. கிரிந்த ஓய வட்டகையின் நீரைப் பங்கிடுவதில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நடைமுறை தோல்வியிலான முயற்சியொன்றாகும். வேறுபட்ட வகைகளைக் கொண்ட நீர் உபயோகிப்பாளர்களுக்கு இடையில் நீரை பரிமாறிக்கொள்வதில் சமத்துவமின்மையை இது விளைவித்துள்ளது. கால்நடைக் கமக்காரர்களின் பிரச்சனைகள் இனிமேல்தான் கவனத்திற்கெடுக்கப்படவுள்ளன.

## 2. இலங்கையில் வழிந்தோடல் மழைநீர் அறுவடையின் தலையீட்டின் மதிப்பீடு

வரட்சி அழிவில் தாக்கத்தைக் குறைந்தபட்சமாக்குவதற்கான கருவியொன்றாக வழிந்தோடல் மழைநீர் அறுவடை (RRWH) முறைமையைப் பயன்படுத்துமுகமாக வரண்ட பகுதிகளில் அதிகரித்து வரும் நீர் பற்றாக்குறையைக் கருத்திற்கெடுக்கையில் நடைமுறையிலான வழிந்தோடல் மழைநீர் அறுவடை முறைமைகளின் தலையீட்டினையும், செயற்றிறனையும் மதிப்பிடுவதே ஆய்வின் நோக்கமாகும்.

**ஆராய்ச்சிக் குழாம்:** திரு.எம்.எ.சி.எஸ்.பண்டார - இணைப்பாளர்
திரு.எம்.எம்.எம்.அஹியார் - இணை ஆராய்ச்சியாளர்

**ஆய்வின் முடிவுகள்:**

i. கமத்தொழில், கால்நடை வளர்ப்பு, நீரியல் விருத்தி மற்றும் உள்ளூர் உபயோகம் ஆகியன போன்ற நோக்கங்களுக்கு RRWH தடாகங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த அறுவடை செய்யப்பட்ட மழைநீரை கமக்காரர்கள் பயன்படுத்தினார்கள். மேட்டு நிலத்திற்கும், வீட்டுத் தோட்டச் செய்கைக்கும் RRWH தடாகங்கள்/குளங்கள் மிகவும் பிரசித்தமானவையாகும்.

ii. குறைநிரப்பு நீர் மூலமொன்றாக தமது பள்ளநிலப் பகுதிகளின் சிலவற்றுக்கு வழிந்தோடல் குளநீரை சுமார் 35 சதவீதக் கமக்காரர்கள் பயன்படுத்துகின்றார்கள். பருவகாலப் பயிர்ச் செய்கையில் சம்பந்தப்பட்டுள்ள கமக்காரர்களின் எண்ணிக்கை RRWH தடாகங்களின் அறிமுகத்தின் பின் கணிசமானளவு அதிகரித்துள்ளது. சிறுபோக பருவங்களின் போது அதிகரிப்பு மிகவும் குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

iii. பயிர்ச்செய்கை முறைமைக்கு கணிசமானளவு தொகையிலான கமக்காரர்கள் புதிய பயிர்களை அறிமுகப்படுத்தியுள்ள அதேவேளை, RRWH கமக்காரர்கள் மத்தியில் செய்கையின் விஸ்தீரணத்தில் அதிகரிப்புகள் உள்ளன.

iv. நெற்செய்கையில் சம்பந்தப்பட்டுள்ள கமக்காரர்களின் எண்ணிக்கையே குறிப்பிடத்தக்க மாற்றமாகும். நாட்டின் வரண்ட பகுதியில் பாரம்பரியமான மானாவாரி காணிகள் அமைந்துள்ள போதிலும் கருத்திட்டத்தின் பின் தத்ரூபமாக அதிகரித்துள்ளது.

v. தமது செய்கையின் ஏகமூலமொன்றாக அல்லது பிரதான நீர் மூலமாக சிறுபோக செய்கையாளர்களில் சுமார் 72 சதவீதத்தினர் RRWHஐப் பயன்படுத்துகின்றனர்.

vi. RRWH தடாகங்கள் மீதான சில தொடர்புகளுடன் மாதிரி குடித்தனங்களின் முறையே 85 சதவீத்தினரினாலும், 25 சதவீத்தினரினாலும் வளர்க்கப்படும் பசுமாடும், கோழிகளுமே பிரதான கால்நடையாகும். கால்நடை வளர்ப்புக்கு வெறுமனே RRWH குளங்களை சுமார் 6 சதவீத கால்நடை கமக்காரர்கள் பயன்படுத்துகின்றார்கள்.

vii. பயிர்ச்செய்கை முறைமைக்கு RRWH குளங்களின் அறிமுகத்தின் பின் வருமானம் தொடர்பான கால்நடையில் முன்னேற்றமொன்றாக சுமார் 69 சதவீத கால்நடை வியாபார முயற்சியாளர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். நீரியல்வாழ்விருத்திச் செயற்பாடுகளுக்கு RRWH தடாகங்களை சுமார் 2 சதவீதப் பயனாளிகள் பயன்படுத்தியுள்ளார்கள். எனினும், பயிர்ச் செய்கைச் செயற்பாடுகளை மேற்கொண்ட அதேவேளை நீரியல்வாழ்விருத்திக்கு மாதிரிப் பயனாளிகளின் 31 சதவீதத்தினர் பயன்படுத்தியுள்ளனர்.

viii. பருவம் முழுவதும் RRWH தடாகங்களில் நீரின் கிட்டாதன்மை, விதந்துரைக்கப்பட்ட நேர காலத்தினுள் மீன் குஞ்சுகளின் வளர்ச்சியின் குறைந்த மட்டம் மற்றும் நீரியல்வாழ்விருத்தி மீது கமக்காரர்கள் மத்தியில் போதியளவு அறிவு இன்மை ஆகியன பயனாளிகளினால் குறித்துரைக்கப்பட்ட பாரிய பிரச்சனைகளாகும்.

ix. குடிப்பதற்கு புறநீங்கலாக பலதரப்பட்ட குடித்தனத் தேவைகளுக்கு அறுவடை செய்யப்பட்ட வழிந்தோடல் நீரை மாதிரிக் குடித்தனங்களின் சுமார் 48 சதவீதத்தினர் பயன்படுத்துகின்றனர். பயனாளிகளின் மனத்தோற்றப்பாட்டின் பிரகாரம், தடாகங்களின் நிருமாணத்தின் பின்னர் சூழவுள்ள நுண் சூழலில் திட்டமான மாற்றங்களை 85 சதவீதத்தினர் அடைந்துள்ளனர்.

x. நாட்டின் வரண்ட பகுதிகளில் RRWH தடாகத்தின் கீழ் பயிர்ச்செய்கை முறைமையினுள் கால்நடையுடனும், நீரியல்வாழ்விருத்தியுடனும் பயிர்களின் ஒன்றிணைப்பு குறுகிய காலத்தில் உயர்வான ஆதாயங்களைக் கொண்டுவர முடியும்.

xi. சகல சூழ்நிலைகளிலும் RRWH தடாக மூலதனப் பொருளாதாரரீதியில் சாத்தியவளத்துடன் தொடர்ந்துமிருப்பதை வேறுபட்ட காட்சித்தோற்றங்களின் பொருளாதாரப் பகுப்பாய்வு காட்டுகின்றது. தடாகங்களைப் பயன்படுத்திய போது கமக்காரர்களினால் அனுபவிக்கப்பட்ட பிரதான பிரச்சனையே குளங்களின் வண்டல்படிவாகும். தடாகங்களில் உருவாக்கப்பட்ட ஒழுகுதலின் ஊடாக நீரின் இழப்பு, ஆவியுயிர்ப்பின் ஊடாக நீரின் இழப்பு, காட்டு மற்றும் உள்ளூர் மிருகங்களினால் அணைகளுக்கான சேதம் ஆகியனவே தடாகச் செயற்பாட்டின் பின்னரான கட்டத்தில் கமக்காரர்களினால் எதிர்நோக்கப்பட்ட ஏனைய பிரதான பிரச்சனைகளாகும்.

## 3. "இலங்கையின் சிறிய கிராம குள முறைமை: அவற்றின் கூர்ப்பு, காட்சியமைப்பு, பங்கீடு மற்றும் அவசியமான பணிகள்" மீதான தனிவிவர நூல்

எழுதியவர்: கலாநிதி சி.ஆர்.பானபொக்கே

**அத்தியாயத்தின் சுருக்கம்**

i. அறிமுகம்
ii. முன்னைய வரலாற்றுக் காலம் (கி.மு. 500 முதல் கி.பி. 300 வரை) இலங்கை வட மத்தியில் சிறிய கிராம குளத்தின் கூர்ப்பு
iii. நடு வரலாற்றுக் காலம் (கி.பி. 300 முதல் கி.பி. 100 வரை)
ஈரநில அரிசியின் விஸ்தரிப்பு: கஸ்கேட் முறைமையின் அமைப்பும், ஒழுங்கும்
iv. பொலன்னறுவ ராஜதானி - கி.பி. 1000 முதல் கி.பி. 1250 வரை பாரிய முறைமை
v. சிறிய கிராம குளங்களில் பாரம்பரியமான நீர்ப்பாசனத்தின் சில அம்சங்கள்
vi. கிராம குள வேலைகள் மீது ஆய்வுக்கான விஞ்ஞானரீதியான அணுகுமுறை

**நடந்துகொண்டிருக்கும் ஆய்வுகள்**

1. இலங்கையில் அணைக்கட்டு முறைமைகள்: நிலவள ஆற்று வட்டகையில் சமூக பொருளாதாரப் பகுப்பாய்வு

**வேறு செயற்பாடுகள்**

**1. இலங்கை நீர் அபிவிருத்தி அறிக்கையைப் புதுப்பித்தல் மீதான ஆலோசனைக்குரிய செயலமர்வு**

UNESCOவின் உலக நீர் மதிப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இலங்கை நீர் அபிவிருத்தி அறிக்கையை (SLWDR) புதுப்பிக்கும் பங்காளிகளில் ஹெ.க.ஆ.ப.நிறுவகமும் ஒன்றாகும். UNESCOஇன் நிதிசார் உதவியுடன் 2008 மார்ச் 18 அன்று கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சுடனான கூட்டுமுயற்சியுடன் ஹெ.க.ஆ.ப.நிறுவகத்தினால் பங்காளர் ஆலோசனைக்குரிய ஒரு நாள் செயலமர்வு ஒழுங்குசெய்யப்பட்டது. SLWDRஐப் புதுப்பிப்பதற்கு நிபுணத்துவக் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் பெறுவதே செயலமர்வின் பாரிய நோக்கமாகும்.

## சந்தைப்படுத்தல், உணவுக் கொள்கை கம-வியாபாரப் பிரிவு

தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட வாழ்க்கைச் செலவு மதிப்புரைக் குழுவுக்காக சந்தைத் தகவலை வழங்குவதற்காக 1979இல் கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகத்தினால் (க.ஆ.ப.நி.) தாபிக்கப்பட்டதே சந்தைப்படுத்தல், உணவுக் கொள்கை, கம-வியாபாரப் பிரிவு (ச.உ.கொ.க.பி) ஆகும். அது முதல் கொள்கைவகுப்போர்களுக்கும், வியாபார முயற்சியாளர்களுக்கும், வர்த்தகர்களுக்கும், மாணவர்களுக்கும் சம்பந்தப்பட்ட தரவுகளையும், தகவலையும் பிரிவு வழங்குகின்றது.

மேலும், இலங்கையில் ஜனாதிபதி அலுவலகத்தில் கமத்தொழில் பண்டங்களின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியன தொடர்பில் கொள்கைத் தீர்மானங்களைச் செய்கின்ற தேசிய உணவு பாதுகாப்பு குழுவுக்கும் மற்றும் வாழ்க்கைச் செலவு மதிப்பாய்வுக் குழுவுக்கும் கமத்தொழில் விலைகளையும் மற்றும் சந்தைத் தகவலையும் ச.உ.கொ.க.பி. வழங்குகின்றது.

மேற்படி விடயத்துக்கு மேலதிகமாக, ஜனாதிபதி செயலகத்தின் கீழுள்ள உணவுக் கொள்வனவு, கண்காணித்தல் அலகுக்கு, அரசாங்க நிறுவனங்களினால் (விமானப் படை, இராணுவம், கடற்படை, வைத்தியசாலைகள் மற்றும் சிறைச்சாலை) கொள்வனவு செய்யப்படும் உணவுப் பொருட்களின் கொள்வனவு விலைகளைத் தீர்மானிப்பதற்காக இப்பிரிவு விலைகளை வழங்குகின்றது.

### கிரமமான வேலைத் திட்டம்

**உணவுத் தகவல், சந்தை நுண்ணாய்வுக் கருத்திட்டம்**

**ஆராய்ச்சிக் குழாம்:**

| | | |
|---|---|---|
| கலாநிதி ரி.எ.தர்மரத்ன | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி சி.பி.ஹதுருசிங்க | - | இணைப்பாளர் |
| திருமதி ரோஷினி ரம்புக்வெல | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி ருவீனி விதானபத்திரன | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| திரு.ரி.ஜி.சோமரத்ன | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| திரு.எச்.எம்.ஜே.கே.ஹேரத் | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| திரு.துமிந்த பிரியதர்ஷன | - | இணை-ஆராய்ச்சியாளர் - 2008 டிசம்பர் முதல் |
| திரு.என்.பி.ஜி.சமந்த | - | இணை-ஆராய்ச்சியாளர் - 2008 டிசம்பர் முதல் |

**உதவியோர்:**

| | | |
|---|---|---|
| புள்ளிவிபர உதவியாளர்கள் | - | 14 |
| சமயாசமய ஆய்வாளர்கள் | - | 18 |

சந்தைப்படுத்தல், உணவுக் கொள்கை, கம-வியாபார பிரிவானது கொள்கை வகுப்பாளர்களுக்கு நேர காலத்திற்கு செம்மையான தரவுகளையும், தக்வலையும் வழங்குகின்றது. வழமை போல் சந்தைத் தகவலையும், சம்பந்தப்பட்ட தரவையும் சேகரிப்பதற்காக கொழும்பிலும், அதை அண்டியுள்ள பகுதிகளிலும் 9 சில்லறைச் சந்தைகள் (புறக்கோட்டை, பாலத்துறை, தெமட்டகொடை, பொரளை, வெள்ளவத்தை, கிருலப்பனை, நுகேகொடை, கடவத்தை, கிரிபத்கொடை) மற்றும் புறக்கோட்டை மொத்த விற்பனைச் சந்தை ஆகியன உணவின் ஒவ்வொரு வகைக்கும் தெரிவு செய்யப்பட்டன. இதற்கு மேலதிகமாக, பாரிய உணவு உற்பத்தி மாவட்டங்களிலும், உணவு நுகர்வு மாவட்டங்களிலும் 24 சந்தைகளில் இருந்து தரவுகளும், தகவலும் சேகரிக்கப்பட்டன.

தரவுகளின் சேகரிப்பு 06 புள்ளிவிபர உத்தியோகத்தர்களினாலும், 07 புள்ளிவிபர உதவியாளர்களினாலும், 20 சமயாசமய ஆய்வாளர்களினாலும் செய்யப்பட்டன. வெளியிடங்களில் தரவுகளைச் சேகரிப்பதற்காக 07 புள்ளிவிபர உத்தியோகத்தர்கள்/உதவியாளர்களும், 15 சமயாசமய ஆய்வாளர்களும் தொழில்படுத்தப்பட்டனர்.

2008ஆம் ஆண்டில் அடக்கப்பட்ட அமைவிடங்கள் வருமாறு: குருநாகல், நிக்கவரட்டிய, தம்புள்ள, மாத்தளை, அனுராதபுரம், தம்புத்தேகம, பொலன்னறுவை, களுத்துறை, நுவரெலியா, கண்டி, ஹங்குரான்கெத்த, பதுளை, பண்டாரவளை, ஹம்பாந்தோட்டை, மாத்தறை, மொனராகலை, அம்பாறை, மரதன்கடஹமுல்ல.

மேலதிகமாக, புறக்கோட்டை, கண்டி, தம்புள்ள, நுரைச்சோலை மற்றும் மரதன்கடஹமுல்ல ஆகிய சந்தைகளில் இருந்து உணவுப் பண்டங்களின் விலைகள் நாளாந்தம் சேகரிக்கப்பட்டன. இத்தரவுகள் நேரத்திற்கு பிரதான மொத்த விற்பனைச் சந்தைகளில் பண்டங்களின் விலைகளை அறிவதற்காக உற்பத்தியாளர்களையும், வர்த்தகர்களையும் இயலச் செய்வதற்காக இலத்திரனியல் ஊடகத்தின் ஊடாக நாளாந்தம் பரப்பப்பட்டன. கொழும்பிலும், வெளியிடங்களிலும் மொத்த விற்பனை விலைகளையும், சில்லறை விலைகளையும், பாரிய உற்பத்திப் பகுதிகளில் உற்பத்தியாளர் விலைகளையும் பகுப்பதன் மூலம், வாராந்த உணவுப் பண்டத் திரட்டு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வெளியிடப்படுகின்றது. ஆண்டின் போது 52 திரட்டுக்கள் நேரகாலத்திற்கு வெளியிடப்பட்டன.

**2008க்கான முன்னேற்றம்**

- வாராந்த உணவுப் பண்டங்கள் திரட்டு - 52 திரட்டுக்கள் (சிங்களம் மற்றும் ஆங்கிலம்) விநியோகிக்கப்பட்டன.
- மாதாந்த உணவுத் தகவல் திரட்டு - 12 திரட்டுக்கள் (சிங்களம் மற்றும் ஆங்கிலம்) விநியோகிக்கப்பட்டன.
- முழு வருடத்திற்கும் சம்பந்தப்பட்ட அதிகார வர்க்கத்தினருக்கு நாளாந்த உணவு விலைகள் வழங்கப்பட்டன.
- நேரகாலத்திற்கு ஊடகங்களுக்கு நாளாந்த மற்றும் வாராந்த தகவல் வழங்கப்பட்டது.
- ஆண்டு முழுவதும் கோரிக்கை விடுத்த அரசாங்க மற்றும் தனியார் துறை முகவராண்மைகளுக்கு விலைத் தரவுகளும், வேறு சந்தைத் தகவலும் வழங்கப்பட்டன.

**முடிக்கப்பட்ட ஆய்வுகள்**

**1. கம-இரசாயனங்களின் விலை ஓரங்களின் பகுப்பாய்வு**

வேலைக் கட்டுரையொன்றாக நொவம்பரில் வெளியிடப்பட்டது.

**ஆராய்ச்சிக் குழாம்:** திருமதி ருவீனி விதானபத்திரன - இணைப்பாளர்
திருமதி ரோஷினி ரம்புக்வெல - இணை ஆராய்ச்சியாளர்

**ஆய்வின் நோக்கங்கள்:**

- இலங்கையின் வேறுபட்ட கம-இரசாயன நிறுவனங்களினால் சந்தைப்படுத்தப்பட்ட கம-இரசாயனங்களின் CIF விலைகளினதும், சில்லறை விலைகளினதும் மீதான தரவுத் தளமொன்றைத் தயாரித்தல்
- இலங்கையில் பயன்படுத்தப்படும் கம-இரசாயனங்களின் CIF விலைகளுக்கும், சில்லறை விலைகளுக்கும் இடையிலான விலை ஓரத்தைக் கண்டறிதல்.
- இலங்கையின் கம-இரசாயனக் கைத்தொழிலுக்கு ஆகுசெலவு கட்டமைப்பினைக் கண்டறிதல்.

**முடிவுகள்:**

i. கம-இரசாயன நிறுவனங்களின் ஆகுசெலவு கட்டமைப்பின் பிரகாரம், இறக்கப்படும் ஆகுசெலவு சுமார் 8-10 சதவீதமாகும். நிறுவனத்தில் ஓரமாகவும், தொழிற்சாலைக் கட்டணமாகவும் ஆகுசெலவில் 40-45 சதவீதத்தை அவை பராமரிக்கின்றன. பூச்சிநாசினி நிறுவனங்கள் 25-30 சதவீதத்தைக் கொண்ட வணிகர் ஓரமொன்றைப் பேணுகின்றன. இது நிறுவனங்களைப் பொறுத்து வித்தியாசப்படுகின்றது.

ii. ஆகுசெலவு கட்டமைப்பின் பிரகாரம் CIF விலைகளுக்கும், சுட்டித்துண்டு விலைகளுக்கும் இடையிலான விலை இடைவெளி சுமார் 150 சதவீதமாகும். எனினும், கள அவதானிப்புகளில் 120 முதல் 250 சதவீதம் வரை வித்தியாசப்பட்டது. இது உற்பத்தியினதும், நிறுவனத்தினதும் மீது தங்கியிருந்தது. நிறுவனத்தின் தொழிற்சாலைக் கட்டணங்கள் சுமார் 20 சதவீதம் என்பதுடன், அவர்கள் 20-25 சதவீதம் கொண்ட மொத்த நிறுவன ஓரத்தைப் பேணுகின்றனர். மேலும், சகல பூச்சிநாசினிகளும் 15 சதவீத பெ.சே.வரிக்கு உட்படுகின்றன. இந்த உயர்வான ஓரங்களின் காரணமாக, CIF விலைக்கும், சில்லறை விலைக்கும் இடையில் உயர்வான விலை இடைவெளியொன்று அறிவிக்கப்படுகின்றது.

iv. கடுமையான போட்டியானது உயர்வான கழிவு சதவீதத்தை வழங்குவதற்கு பிரதான வணிகர்களைத் தூண்டுவதுடன், நிறுவனங்களின் கூற்றுப்படி, இது 5 சதவீதம் கொண்ட நிகர ஓரமொன்றுடன் 20-25 சதவீதம் வரை வேறுபடுகின்றது. எனினும், கள அவதானிப்புகளில், இது 10 முதல் 30 சதவீதம் வரை வித்தியாசப்பட்டிருந்ததுடன், விநியோகங்களுக்கான நிகர ஓரம் ஏறத்தாழ 5 சதவீதத்தினால் மாற்றமடைகின்றது.

v. பெருமளவு கமத்தொழில் உற்பத்திப் பகுதிகளில் பூச்சிநாசினிகளின் சில்லறை விலைகள் சுட்டித்துண்டு விலைகளை விடக் குறைவானதாகும். கழிவின் சதவீதத்தைப் பொறுத்து இடத்திலிருந்து இடத்திற்கு ஒரே பொதி அளவுக்கான உற்பத்தியின் சில்லறை விலை வித்தியாசப்படுகின்றது.

## 2. வேறு களப் பயிர்களின் உற்பத்தியினதும், சந்தைப்படுத்தலினதும் மீதான ஆய்வு

**ஆராய்ச்சிக் குழாம்:** திருமதி சி.பி.ஹதுருசிங்க - இணைப்பாளர்
திரு.ரி.ஜி.சோமரத்ன - இணை ஆராய்ச்சியாளர்
திருமதி ரோஷினி ரம்புக்வெல - இணை ஆராய்ச்சியாளர்
திருமதி ருவீனி விதானபத்திரன - இணை ஆராய்ச்சியாளர்

**நோக்கங்கள்:**

பயிர்களின் குறைவடையும் செய்கைக்கான காரணங்களை உறுதிப்படுத்துவதும், துறையின் கட்டமைப்பையும், நடத்தலையும், செயற்றிறனையும் ஆய்வதுமே ஆய்வின் பிரதான நோக்கமாகும். ஏனைய நோக்கங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன:

i. உற்பத்தியினதும், கிராக்கியினதும் முன்னைய போக்கினையும், தற்போதைய நிலையையும் மதிப்பாய்தல்.
ii. உற்பத்தியின் விஸ்தரிப்புக்கான ஆற்றலளவை ஆய்தல்.
iii. தரமான உற்பத்திகளின் விஸ்தரிப்புக்கான மட்டுப்படுத்தல்களைக் கண்டறிதல்.
iv. கமநலத் துறையில் உணவுப் பாதுகாப்பின்மையுள்ளதா என்பதை ஆய்தல்.
v. செய்கைக்கும், பதப்படுத்தலுக்கும், சந்தைப்படுத்தலுக்கும் புதிய தொழில்நுட்பங்களை கமக்காரர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என ஆய்தல்.
vi. சந்தை ஓரங்களைப் பகுப்பாய்தல்.
vii. இத் துறையின் அபிவிருத்திக்காக கொள்கை நடவடிக்கைகளை சுட்டிச்சொல்லுதல்.

**முடிவுகள்:**

i. 2000ஆம் ஆண்டு வரை பெருமளவு பயிர்களின் செய்கைபண்ணப்பட்ட விஸ்தீரணம் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், அதன் பின்னர் அது சுமார் 20,000 ஹெக்டாரில் ஸ்திரமடைந்துள்ளது. தனியார் நிறுவனங்களினால் செய்யப்பட்ட முன்னிலைப்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களின் விளைவாக சோளத்தின் செய்கை அதிகளவு அதிகரித்துள்ளது. அம்பாறை மாவட்டத்தில் "*தவள*" என்ற புதிதாக திருத்தியமைக்கப்பட்ட உள்ளூர் கௌபீ வகையை செய்கை பண்ணுவதற்கான போக்கொன்றுள்ளது. சிறந்த தரத்தின் காரணமாக இப்பண்டம் உயர்ந்த விலையொன்றைப் பெற்றுக்கொண்டது.

ii. விதைத் துறையில் தனியார் துறை ஈடுபடுகின்ற போதிலும், அரசாங்கத்தின் சார்பாக நடைமுறையிலான தாமதங்களின் காரணமான உயர் தரத்திலான விதைகளுக்கும், நடுகைத் திரவியங்களுக்குமான அடைதல் மட்டுப்பட்டுள்ளது. மேலதிகமாக உயர் பெறுமதியிலான பயிர்களுக்கு ஆராய்ச்சி மற்றும் விஸ்தரிப்புச் சேவைகள் போதுமானவையல்ல என்பதுடன், கிராக்கி செலுத்தலிலானதுமல்ல.

iii. தரமான விதைகள் இன்மையின் காரணமாக, சந்தையில் கிட்டுகின்ற உற்பத்திகள் சார்புரீதியில் குறைவானது என்பதுடன், இறக்குமதி செய்யப்படும் பண்டங்களுக்கான கிராக்கி உயர்வானதாகும். 1996க்கு முன்னர், பாரம்பரியமான பயிர்களின் மொத்த கிட்டுந்தன்மை உள்ளூர் உற்பத்தியை அடக்கியிருந்ததுடன், அதைத் தொடர்ந்து அது 70 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்தது. அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட உயர்ந்த பாதுகாப்பு நடவடிக்கைகளின் காரணமாக 2004-2007 வரை பெரிய வெங்காயத்தின் உற்பத்தி 145 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. சுங்கத் தீர்வை ரூபா 3.00/கி.கி. முதல் ரூபா 9.00/கி.கி. வரை அதிகரித்துள்ளது.

iv. இத்துறையின் நீண்ட கால வளர்ச்சிக்கு இறுப்புப்பட்டி கட்டணங்களில் எழுந்தமான மாற்றங்கள் சாதகமானவை அல்ல. ஏனெனில் பண்டங்களின் உற்பத்தியினதும், சந்தைப்படுத்தலினதும் செயற்றிறனின்மையை இக் கொள்கை அதிகரிக்கின்றது. எழுந்தமான இறுப்புப்பட்டியலின் விளைவொன்றாக, ஒவ்வொரு வருடமும் சந்தை விலை திரிபுபடுத்தல்கள் இடம்பெறுவதுடன், இது உற்பத்தியாளர்களையும், நுகர்வாளர்களையும் மோசமாக பாதித்துள்ளது. பருவமற்ற காலத்தின் போது சகலருமே நுகர்வாளர்களாவர்.

v. உறுதியற்றதன்மையின் காரணமாக, இத்துறையில் மூலதனமிடுவதற்கு உற்பத்தியாளர்களும், வர்த்தகர்களும், மற்றும் பதப்படுத்துவோர்களும் தயக்கம் காட்டுகின்றார்கள். பாரம்பரியமான களப் பயிர்களுக்கு இன்னுமே நுகர்வாளர்கள் இருப்பதுடன், கிராக்கியும் அதிகரித்துள்ளது. உள்ளூர் உற்பத்திக்கும், கிராக்கிக்கும் இடையில் இடைவெளியை நிரப்புவதற்காக, மொத்தமாக கிட்டுகின்ற விநியோகத்தின் சுமார் 25-30 சதவீதம் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது.

3. **உத்தேசமான சியம்பலாந்துவ-மொனராகல சீனி கருத்திட்டத்தின் சமூக-பொருளாதார நிலை**

**ஆராய்ச்சிக் குழாம்:** கலாநிதி ரி.எ.தர்மரத்ன - இணைப்பாளர்
கலாநிதி எல்.பி.ரூபசேன - இணை ஆராய்ச்சியாளர்

நிதிப்படுத்தலின் மூலம்: சீனி ஆராய்ச்சி நிறுவனம்

உத்தேசமான சியம்பலாந்துவ-மொனராகல சீனிக் கருத்திட்டம் மீதான முன் சாத்தியவள ஆய்வொன்றை நடத்துமாறு ஹெ.க.ஆ.ப.நிறுவகத்தை கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் கோரியிருந்தது. உத்தேசமான தொழிற்சாலை அமைவிடத்தின் 40 கி.மீ. பிரதேசத்தின் மீதான அடிப்படையில் முன்செலுத்தல் குழுவினால் அமைவிடங்கள் அடையாளங் காணப்பட்டன. மொனராகல மாவட்டத்தில் இரு பிரிவுச் செயலாளர் பகுதிகளினுள் 61 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் அளவீடு மேற்கொள்ளப்பட்டது.

அளவீட்டின் நோக்கங்கள் வருமாறு:

i. குடித்தொகையியல் குணவியல்புகள், கல்வி மட்டங்கள், தொழில், தொழிலின்மை, காணி உரித்துரிமை, மற்றும் காணி உபயோக முறை ஆகியவற்றை உறுதிப்படுத்துதல்;
ii. நிலவுகின்ற உட்கட்டமைப்பு வசதிகளைப் பரிசீலித்தல்;
iii. போட்டித்தன்மையிலான இலாபத்தன்மையை கணக்கிடுதல்;
iv. கரும்புச் செய்கைக்கு உத்தேசமான காணியை மதிப்பிடுதல்.

கட்டுப்பாட்டுப் பகுதியின் மொத்த காணிப்பகுதி 165,593 ஏக்கர் தொகையிலானதாகும். இதில், வனவாழ்வுக்கு 30 சதவீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. தனியார் - உரிமையிலான காணி 5.09 சதவீதம் மட்டுமேயாகும்; அத்துமீறப்பட்ட காணி 20 சதவீதத்திற்கு கணக்கு காட்டுகின்றது. அரசாங்கக் காணிகள் 17 சதவீதத்தைப் பிரதிநிதிப்படுத்துகின்றது. காணிகளின் தங்கவைத்தல் அளவுகள் தேசிய மட்டத்துடன் ஒப்பிடுகையில் சார்புரீதியில் பெரியதாகும். வீட்டுத்தோட்டங்கள் சாராத விஸ்தீரணத்தின் சுமார் 18.18 சதவீதம் அளவில் 5 ஏக்கர்களுக்கு மேற்பட்டதாகும். கரும்புச் செய்கைக்கு உத்தேசமான காணிகளாக சுமார் 44,785 ஏக்கர்கள் அடையாளங் காணப்பட்டன.

4. **இலங்கையில் உணவு பாதுகாப்பின்மை, ஊறுபடுந்தன்மை தகவல், திட்டமிடல் முறைமை (FIVIMS)**

**ஆராய்ச்சிக் குழாம்:** கலாநிதி வசந்தி விக்ரமசிங்க - இணைப்பாளர்

நிதிப்படுத்தலின் மூலம்: உணவு, விவசாயத் தாபனம்

**ஆய்வின் நோக்கங்கள்:**

- தேசிய, பிராந்திய, பிரிவு மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டங்களில் உணவுப் பாதுகாப்பின்மையையும், ஊறுபடுந்தன்மையிலான பகுப்பாய்வையும் அனுமதிக்கின்ற தகவல் முறைமையொன்றைத் தாபித்தல்;
- ஒவ்வொரு மட்டத்திலும் உணவுப் பாதுகாப்பின்மையையும், ஊறுபடுந்தன்மையையும் குறைப்பதற்கு கொள்கைகளையும், மூலோபாய செயற்பாட்டு விருப்புக்களையும், சக்திமிக்கதாக வகுத்தமைப்பதற்கு கொள்கை வகுப்போருக்கும், திட்டமிடலாளர்களுக்கும் துணை-தேசிய மட்ட உணவுப் பாதுகாப்பின்மையையும், ஊறுபடுந்தன்மை மதிப்பீடுகளையும் பொறுப்பேற்றல்;
- ஒன்லைன் மூலமாகவும், அச்சு ஊடகம் ஊடாகவும் ஊறுபடுந்தன்மை மதிப்பீடுகளினதும், திட்டமிடுதலினதும் மீதான தகவலைப் பரப்புதல்.

**விளைவு**

(அ) கொள்கை, ஊறுபடுந்தன்மைப் பகுப்பாயவு அறிக்கை தொகுக்கப்பட்டது.

i) பிரிவுச் செயலக மட்டத்தில் உணவுப் பாதுகாப்புக்கு ஊறுபடத்தக்க அடையாளம் காணப்பட்ட அமைவிடங்களும், சனத்தொகை புறவரைகளும்;

ii) நாட்டில் உணவுப் பாதுகாப்பின்மைக்கு ஊறுபடுந்தன்மையைக் குறைப்பதற்கு திரட்டப்பட்ட சாத்தியவள கொள்கை விருப்புக்களும், தலையீடுகளும்;

(ஆ) இலங்கை முக்கிய காட்டிகள் தரவு முறைமையுடன் அல்லது தீவிரம்சார்ந்த FIVIMS தரவு திட்டமிடலுடன் இணைப்பினைக் கொண்டுள்ள FIVIMS இணையதளம் விருத்திசெய்யப்பட்டது. www.asiafivims.net/srl/page.jspx

(இ) FIVIMS செய்திக்கடிதம்

## 5. நெல் துறையில் உர மானியக் கொள்கையின் மதிப்பாய்வு

| ஆராய்ச்சிக் குழாம்: | கலாநிதி வசந்தி விக்ரமசிங்க | - | இணைப்பாளர் |
|---|---|---|---|
| | திருமதி கீதானி சமரசிங்க | - | இணை ஆராய்ச்சியாளர் |
| | திரு.எஸ்.அபாசிங்க | - | இணை ஆராய்ச்சியாளர் |

**நோக்கங்கள்:**

i. இலங்கையில் நெல் துறை மீதான உர மானியக் கொள்கையை மதிப்பாய்தல்;

ii. நாட்டில் நெல் உற்பத்தி மீதான மானியக் கொள்கையின் சக்திமிக்கதன்மையை ஆய்தல்:

iii. வருடாந்த வரவு-செலவுத்திட்ட ஆகுசெலவுகளின் நிமித்தம் மானிய செயல்திட்டத்தின் கீழ் நெல் துறையில் உரப் பாவனையின் செயற்றிறனை ஆய்தல்;

iv. புதிய மானியத் திட்டத்தின் கீழ் தனியார் துறை பங்கீடு-பொறிமுறை தொடர்பில் கமக்காரர்களுக்கு விநியோகத்தின் கிட்டுந்தன்மையினதும், நேரம் தவறாமின்மையினதும் அத்துடன் பங்கீட்டு ஆகுசெலவினதும் மீது அரசாங்க முகவராண்மைகள் ஊடாக உரங்களின் கொள்வனவையும், பங்கீட்டினையும் மதிப்பிடுதலும், ஒப்பிடுதலும்; மற்றும்

v. சாத்தியமான உர மானியத் திட்டத்தை செயற்றிறனாகவும், சிக்கனமாகவும் வடிவமைப்பதற்கு பொருத்தமான கொள்கை விருப்புக்களைச் சுட்டிச்சொல்லுதல்.

**முடிவுகள்:**

i. பொருளாதாரச் செயற்றிறனினதும், உணவுப் பாதுகாப்பினதும் தேசிய நோக்கங்களைச் சாதிப்பதையும், குறைந்த காலத்தில் இலங்கையின் கிராமியக் கமக்காரர்களின் சேமநலனை அதிகரிப்பதையும் நோக்கி சக்திமிக்கதும், செயற்றிறனானதுமான பங்கீடொன்றை புதிய உர மானியச் செயல்திட்டம் செய்துள்ளது. விதந்துரைப்பு வரை உரப்பாவனையை கொண்டு வருவதன் மூலமும், நேரடிப் பிரயோகத்திற்கு உரப்பாவனையை மாற்றுவதன் மூலமும் சராசரி விளைச்சலை அதிகரிப்பதன் மூலம் உரப்பாவனையின் செயற்றிறனை அதிகரிக்கவுள்ளது. அதிகரிக்கப்பட்ட நெல் உற்பத்தியின் காரணமாக பெறுமதி சேர்ப்பில் தொடர்ந்துள்ள அதிகரிப்பு உலகளாவிய உணவு நெருக்கடிநிலையின் போது நாட்டுக்கு பொருளாதார விளைவுகளை அதிகரிப்பதை விளைவித்துள்ளது.

ii. புதிய உர மானியத்தின் கீழ், 50 கி.கிராமுக்கு ரூபா 350இல் மூன்று பிரதான உரங்கள் வழங்கப்பட்டதுடன், 1990இல் மானியம் மீளப்பெறப்பட்ட பின்னர் சகல மூன்று உரங்களுக்கும் பதிவு செய்யப்பட்ட ஆகக்குறைந்த விலை இதுவாகும். இதன் விளைவாக, சராசரி உற்பத்தி ஆகுசெலவின் 15 சதவீதத்திலிருந்து 6 சதவீதத்திற்கு உர உள்ளீடு ஆகுசெலவு குறைவடைந்தது. எனினும், 2007இல் உலக சந்தையில் சகல உரங்களினதும் அதிகரித்துவரும் விலைகளின் பின்னணியில் பாரிய மானிய வீதத்தின் காரணமாக கமத்தொழில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 30 சதவீதத்திற்கு மானிய ஆகுசெலவு விளங்கியது. 2007இல் ரூபா 11 பில்லியன் கொண்ட மொத்த மானியத்தில், மானியத்தின் 50க்கு மேற்பட்ட சதவீதம் 3 ஏக்கர்களுக்கும் குறைவான நெற் காணியைக் கொண்டுள்ள கமக்காரர்களுக்கு கைமாற்றப்பட்டது.

iii. அரசாங்கத் தலைமையில் அமுல்படுத்தப்படும் பொறிமுறையின் பொறுப்பினை பொறுப்பேற்பதன் மூலம், கமநல அபிவிருத்தித் திணைக்களம் கமக்காரர்களுக்கு உர

விநியோகத்திற்கான முழுப்பொறுப்பையும் படிப்படியாக பெற்றுக்கொண்டது. உர விநியோகத்தை அரசாங்க பொறுப்பேற்றதன் மூலம் மேலதிகமான நன்மைகளை திரட்டுகின்ற அதேவேளை, ஒரு சில பின்னடைவுகள் இனிமேல்தான் அவதானிக்கப்பட வேண்டியுள்ளது. எனினும், புதிய மான்யத் திட்டத்தினால் பலப்படுத்தப்பட்ட மிகவும் உகந்த நிறுவனரீதியான பொறிமுறை, நீண்ட காலத்தில் நெற்காணிகளின் உற்பத்தித்திறன் ஆற்றலளவுகளை அதிகரிப்பதற்கு அதிகளவு ஒன்றிணைந்த தாவரப் போஷாக்கு செயல்திட்டமொன்றை அமுல்படுத்தும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

## 6. கிராமிய அபிவிருத்திக்கும், வறுமையைக் குறைப்பதற்கும் நீர்வாழ் விருத்தி

**எழுதியவர்:** கலாநிதி ஜே.எச்.டி.ரி.கஸாகல (இலங்கை மிருக வைத்திய ஆராய்ச்சி நிறுவனம், பேராதனை)

**நோக்கங்கள்:**

இலங்கையில் நீர் வாழ் விருத்தித் துறையின் நிலையைப் பரிசீலிப்பதும், கிராமிய அபிவிருத்திக்கும், வறுமையைக் குறைப்பதற்குமான மூலோபாயத்தின் முக்கிய அம்சமொன்றாக அது எவ்வாறு மேம்படுத்தப்பட முடியும் என்பதைப் பரிசீலிப்பதுமே இவ்வாய்வின் நோக்கமாகும். தேசிய பொருளாதாரத்தை நோக்கி அதன் பங்களிப்பினை உயர்த்துவதற்கு துறையின் அபிவிருத்திக்கு பாரிய போக்குகளையும், மட்டுப்படுத்தல்களையும் மற்றும் எதிர்காலத்தையும் அது மதிப்பாய்கின்றது.

**முடிவுகள்:**

i. நீரியல் வாழ் விருத்தியானது கிராமியக் குடித்தன வருமானத்தை பன்னிலையாக்குவதற்கும், அதிகரிப்பதற்கும் குறிப்பிடத்தக்க ஆற்றலளவை அனேகமாக நுண் வியாபார முயற்சிகள் மற்றும் குடிசைக் கைத்தொழில்களின் பெருமளவு அமைப்புக்கள் போன்ற கமத்தொழில் சாரா செயற்பாடுகளினால் அதிகளவு வழங்கப்படுகின்ற அளவுக்கு முன்வைக்கின்றது. மேலும் கமத்தொழில் உற்பத்தி முறைமைகளின் அடிப்படைப் பாகமொன்றாக நீரியல் வாழ்விருத்தி தொழிற்பட முடியும்.

ii. இலங்கையில் நீரியல் வாழ்விருத்தித் துறையின் முன்னேற்றத்திற்கான அதிகளவு ஆற்றலளவை ஆய்வு காட்டுகின்றது. முதலாவதாக, அயனமண்டல மீன் வகைகள், தாவரங்கள் போன்ற பலதரப்பட்ட நீரியல்வாழ்விருத்தி இனங்களை வளர்ப்பதற்கு அவசியப்படும் பன்னிலையிலான காலநிலைகளுடனும், வேறுபட்ட சூழலியல் வலயங்களுடனும் நாடு ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது. இரண்டாவதாக, பல்லாண்டு மற்றும் பருவகால நீர்த்தேக்கங்கள், வெள்ளச் சமவெளிகள், உவர் நீருடனான பாரிய பகுதிகள் ஆகியன உட்பட மிகவும் பாரிய எண்ணிக்கையிலான உள்நாட்டு நன்னீர் உறுப்புக்கள் கிட்டுகின்றன. மூன்றாவதாக, பவளச் சிப்பிகள், கடல் வெள்ளரிகள், பால்மீன், கடல் பாஸ், மற்றும் குரூப்பர் ஆகியனவற்றை விருத்தி செய்வதற்கு கரையோரப் பகுதிகளில் பொருத்தமான அமைவிடங்கள் உள்ளன. நான்காவதாக, கடந்து போன ஆண்டுகளில் விஸ்தரித்துள்ள இறால் விருத்தியான நடைமுறையிலான மூலவளங்களைப் பயன்படுத்தி அதன் முழுமையான ஆற்றலளவுக்கு மூலோபாயரீதியில் விருத்தி செய்யப்பட முடியும். ஐந்தாவதாக, நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு நீரியல்வாழ்விருத்தித் துறையின் முக்கியத்துவத்தை இலங்கை அரசாங்கம் அங்கீகரிப்பதுடன், எனவே, நீரியல்வாழ்விருத்தி மூலவளங்களைப் பேணுவதற்கு தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு அது உதவுவதுடன், கொள்கைகளை அமுல்படுத்துகின்றது. இறுதியாக, உலகில் மிக விரைவான உணவு - உற்பத்தித்துறையாக, ஏற்றுமதி வருமானங்களை உயர்த்துவதற்கு நீரியல்வாழ் விருத்தியானது உயர்ந்த ஆற்றலளவை வழங்குகின்றது. கடந்த ஐந்து தசாப்தங்களின் போது நீரியல் வாழ் விருத்தித் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை இலங்கை காட்டியுள்ளது.

iii. துறையினால் முன்வைக்கப்பட்டுள்ள எதிர்காலங்களின் காரணமாக, கிராமிய முன்னேற்றத்திற்கும், வறுமை ஒழிப்புக்கும் மற்றும் போஷாக்கை மேம்படுத்துவதற்குமான அதன் ஆற்றலளவு பெருமளவு கிராமிய அபிவிருத்திக் கருத்திட்டங்களினாலும்,

செய்திட்டங்களினாலும் சிறிதளவே ஆராயப்பட்டுள்ளது. கிராமிய முன்னேற்றத்தையும், கிராமிய வறுமையையும் நோக்காகக் கொண்டு நீரியல்வாழ் விருத்தித் துறையின் முன்னேற்றத்தை நோக்கி விரிவானதொரு மூலோபாயம் வடிவமைக்கப்பட்டு, அமுல்படுத்தப்பட வேண்டும். இயற்கையான மூலவளங்களின் பொதுவான ஆதனங்களாகவும், பேணலாகவும் அனேகமாகப் பயன்படுத்தப்படுகின்ற நடைமுறையிலான மூலவளங்களுடன் இணைந்துள்ள மோதல்களின் சூழலுக்கு, தீர்மானத்திற்கு அல்லது குறைந்தபட்சமாக்கலுக்கு அதிகளவு கெடுதலின்றி நடைமுறையிலான மூலவளங்களின் அதிகபட்ச ஒதுக்கீடு மற்றும் உபயோகம் ஆகியன போன்ற அம்சங்களுக்கு இத்தகையதொரு மூலோபாயம் கவனத்தைச் செலுத்த வேண்டும்.

**வேறு செயற்பாடுகள்**

i. கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்ட எழுந்தமான அறிக்கைகள்

அ. வேறு களப்பயிர்கள், மரக்கறிகள் மற்றும் பழங்கள் ஆகியவற்றின் சூழ்நிலை அறிக்கை

## மனித வளங்கள் நிறுவனரீதிசார் அபிவிருத்திப் பிரிவு

குறுகிய காலநெறிகள், டிப்ளோமா பாடநெறிகள், செயலமர்வுகள், மற்றும் கருத்தரங்குகள் ஆகியவற்றின் அமைப்பை ஹெ.க.அ.ப. நிறுவகத்தின் பயிற்சித் திட்டங்கள் வகிக்கின்றன. இத்திட்டங்களின் வள ஆட்கள் பிரதானமாக நிறுவகத்தின் ஏனைய தொடர்பான ஆராய்ச்சிப் பிரிவுகளில் இருந்தும் பெறப்படுகின்றனர். மேலதிகமாக குறிப்பான தேவைகள் மீது பல்கலைக்கழகங்கள், வேறு அரசாங்க நிறுவனங்கள் மற்றும் முகவராண்மைகள், மற்றும் அ.சா. தாபனங்கள் ஆகியவற்றிலிருந்து வள நபர்கள் பெறப்படுகின்றனர்.

**முடிக்கப்பட்ட பயிற்சி திட்டங்கள்**

1. **கிராமிய/சனசமூக அபிவிருத்திக் கருத்திட்டங்களின் திட்டமிடலுக்கும், முகாமைத்துவத்திற்குமான பங்கெடுப்பு தொழில்நுட்பங்கள் (RRA, PRA, PCM) மீதான பயிற்சிச் செயல்திட்டங்கள் ("*கம நெகும*" செய்திட்டத்தின் கீழ் "*கம நெகுமற்ற சிக்கற்ற சவிய*" செயல்திட்டம்)**

**இணைப்பாளர்** திரு.ஆர்.எம்.ஆர்.பண்டார

அரசாங்கத்தின் *கமநெகும* செயல்திட்டத்தின் கீழ் கிராமியப் பகுதிகளில் நிலைத்திருத்தல் அபிவிருத்திக்கான சனசமூக செயல்திட்டங்களைத் தயாரிக்கும் முக்கியத்துவத்தின் காரணமாக, 2007இல் ஒரு தொடரான பயிற்சிச் செயல்திட்டங்களை ஹெ.க.ஆ.ப.நி. நடத்தியது. கமத்தொழில் அடிப்படையிலான சனசமூக செயல்திட்டத்தின் தயாரிப்பு மீதான அறிவை உயர்த்துவதற்காக *கமநெகும* செயல்திட்டத்துடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ள மாகாண செயலாளர் அலுவலகங்களின் உத்தியோகத்தர்களின் விழிப்பியலை அதிகரிப்பதையே செயல்திட்டங்கள் குறிக்கோளாகக் கொண்டிருந்தன. செயல்திட்டத்தின் அடிப்படைக் கருப்பொருள் "கம நெகும சிக்கற்ற சவிய" ஆகும். கிராமிய/சனசமூக அபிவிருத்தித் திட்டமிடலிலும், முகாமைத்துவத்திலும் RRA/PRA மற்றும் PCM போன்ற பங்கெடுப்புத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதில் தமது திறன்களை முன்னேற்றுவதற்கு மேலதிகமாக பங்கெடுப்பு திட்டமிடலிலும், முகாமைத்துவத்திலும் பயன்படுத்தப்படும் கருத்துருக்களினதும், முறைகளினதும் மீது பங்கெடுப்பாளர்களின் அறிவை உயர்த்துவதே அடிப்படைப் பாரிய நோக்கமாகும்.

பொலன்னறுவையில் கமத்தொழில் திணைக்களத்தின் பயிற்சி நிலையத்தில் 2008 மார்ச் 29 முதல் ஏப்ரல் 2 வரை 16 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முதலாவது ஐந்து நாள் பயிற்சி திட்டம் நடத்தப்பட்டது. இரண்டாவது PRA பயிற்சித் திட்டம் மாத்தறையில் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் அலுவலகத்தில் 2008 செப்ரெம்பர் 29 முதல் 2008

ஒக்ரோபர் 3 வரை 32 உத்தியோகத்தர்களுக்கு நடத்தப்பட்டது. இரு செய்திட்டங்களும் 48 உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதற்கு இயலுமாகவிருந்ததுடன், கள அப்பியாசங்களுக்காக தெரிவுசெய்யப்பட்ட பயிற்றுனர்களுக்கும், கிராமங்களுக்கும் மூன்று கிராமிய/சனசமூக அபிவிருத்தி மாதிரித் திட்டங்களைத் தயாரித்தது.

நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சின் நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவுடன் ஹெ.க.ஆ.ப.நிறுவகத்தினால் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், மகா இலுப்பள்ளமை உள்ளக சேவைகள் பயிற்சி நிலையத்தில் 2008 ஜனவரி 17 முதல் 21 வரை இன்னொரு PRA பயிற்சி செய்திட்டம் நடத்தப்பட்டது. செய்திட்டத்தில் அனுராதபுரம் மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் இருந்து 20 அரசாங்க உத்தியோகத்தர்கள் பங்கெடுத்தனர்.

## 2. நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சின் நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவினால் அமுல்படுத்தப்படும் "*வாரி புபுதுவ*" கருத்திட்டத்தின் சமூக ஒன்றுதிரட்டுனர்களுக்காக சமூக ஒன்றுதிரட்டல் மீதான பயிற்சிச் செயல்திட்டங்கள்

**இணைப்பாளர்:** திரு.ஆர்.எம்.ஆர்.பண்டார

நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சின் நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவினால் "*வாரி புபுதுவ*" கருத்திட்டம் குருநாகல், அனுராதபுரம், புத்தளம் மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டன. இதன் கீழ், கருத்திட்டத்திற்காக 184 புதிய சமூக ஒன்று திரட்டுனர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவின் "*வாரி புபுதுவ*" என்ற கருத்திட்டத்தின் வேண்டுகோளின் பேரில் 2007 ஜூலையில் மேற்படி பயிற்சி செயல்திட்டத்தை நடத்துவதற்காக உசாவுகை சேவைகளை ஹெ.க.ஆ.ப.நி. வழங்கியது. ஹெ.க.ஆ.ப.நிறுவகத்திற்கும், நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைக்கு அமைவாக 2008 இறுதிப் பகுதிக்குள் ஆறு பயிற்சிச் செயல்திட்டங்கள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டன. சமூக ஒன்றுதிரட்டல் செயற்பாடுகளை சமூக ஒன்றுதிரட்டுனர்களைப் பரிந்துரைப்பதையும், அறியச் செய்வதையும் இப் பயிற்சி செயல்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டன. நடைமுறையிலான கமக்காரர் தாபனங்களை பலப்படுத்துதல், கமக்காரர் தாபனங்களுடனும், வேறு சம்பந்தப்பட்ட அரசாங்கத்தாபனங்கள்/அரச சார்பற்ற தாபனங்கள் மற்றும் தனியார் தாபனங்கள் ஆகியவற்றுடனும் இணைப்பினை ஏற்படுத்தல், கமக்காரர் தாபனங்களின் உறுப்பினர்களின் பிரச்சனைகளையும், ஒற்றுமையின்மையையும் குறைந்தபட்சமாக்குதல், கமக்காரர் தாபனங்களுடனும், "*வாரி புபுதுவ*" கருத்திட்டத்துடனும் இணைப்பினைப் பலப்படுத்துதல் ஆகியனவே பயிற்சிச் செயல்திட்டங்களின் பிரதான நோக்கங்களாகும்.

2007 மேற்படி நோக்கங்களைச் சாதிப்பதற்காக இரு பயிற்சிச் செய்திட்டங்கள் நடத்தப்பட்டதுடன், செய்திட்டங்களில் 67 சமூக ஒன்றுதிரட்டுனர்கள் பங்கெடுத்தனர். 2008இன் போது, மேலும் நான்கு பயிற்சிச் செய்திட்டங்க்ள ஹெ.க.ஆ.ப.நிறுவகத்தினால் முடிக்கப்பட்டன. முதலாவது பயிற்சிச் செய்திட்டம் 2008இல் ஏப்ரல் 21 முதல் 25 வரை நடத்தப்பட்டது. இரண்டாவது பயிற்சித் செய்திட்டம் செப்ரெம்பர் 5 முதல் 10 வரையும், மூன்றாவது பயிற்சிச் செய்திட்டம் நொவம்பர் 13 முதல் 18 வரையும், நான்காவது பயிற்சிச் செய்திட்டம் 2008 டிசம்பர் 4 முதல் 9 வரையும் நடைபெற்றன. இச் செய்திட்டங்கள் வயம்பவில் வயம்ப பயிற்சி நிலையத்தில் நடத்தப்பட்டன. அனுராதபுரம், குருநாகல் மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் இருந்து 108 ஒன்றுதிரட்டுனர்கள் பங்கெடுத்தனர்.

2008இன் போது இந் நான்கு செயல்திட்டங்களின் விளைவுகள் அனுராதபுரம் மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் வாரி புபுதுவ கருத்திட்டத்தின் கீழ் 108 பயிற்றுவிக்கப்பட்ட சமூக ஒன்று திரட்டுனர்களாவர். 2008இன் இறுதிக்கு முன்பாக நீ.மு.பிரிவுடன் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவதை ஹெ.க.ஆ.ப.நி. முடித்துக் கொண்டுள்ளதுடன், 175 சமூக ஒன்றுதிரட்டுனர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

## 3. பொதுநலவரசு செயலகத்துடனான கூட்டுமுயற்சியுடன் கமத்தொழில் சந்தைப்படுத்தல் விஸ்தரிப்பு மீதான உள்நாட்டு பயிற்சிச் செய்திட்டம்

**இணைப்பாளர்கள்:** திரு.ஆர்.எம்.ஆர்.பண்டார
கலாநிதி எல்.பி.ரூபசேன

நாட்டில் தற்போதுள்ள விஸ்தரிப்பு முறைமையானது பயிரொன்றுக்கு விளைச்சலை அதிகரிப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட உற்பத்தி முனைப்பிலானது என்பதுடன், பண்ணைத் திட்டமிடலுக்கும், சந்தைப்படுத்தல் மூலோபாயங்களுக்கும் கவனம் செலுத்தப்படுவதில்லை. இச் சூழலில் தமக்கு சௌகரியமான பயிர்களை கமக்காரர்கள் வளர்ப்பதுடன், உற்பத்தியின் பின்னர் சந்தையை எதிர்நோக்குகின்றனர். இதன் விளைவாக, சந்தைக் கிராக்கியுடன் உற்பத்தி பொருந்துவதில்லை. எனவே, கமத்தொழிலை நிலைத்திருக்க வைப்பதற்கு சந்தை முனைப்பிலான உற்பத்தியின் முறைமையொன்று உடனடியாக அவசியமாகும். இதைச் சாதிப்பதற்கு தற்போதைய முறைமைக்கு சந்தைப்படுத்தல் விஸ்தரிப்பு சேர்க்கப்பட வேண்டும்.

இச் செய்திட்டத்தின் பொதுவான குறிக்கோள்கள் வருமாறு:

அ. சந்தைப்படுத்தல் விஸ்தரிப்பு மீது கருத்துருக்கள் பற்றி பங்கெடுப்பாளரின் அறிவை உயர்த்துதல்,
ஆ. கமக்காரர்கள் மத்தியில் சந்தைப்படுத்தல் நுண்ணாய்வை வழங்கும் வழிகளையும், முறைகளையும் புரிந்து கொள்ளுதல்
இ. சந்தைப் பங்கெடுப்பாளர்கள் மத்தியில் முன்னோக்கியதும் பின்நோக்கியதுமான தொடர்புகளை விருத்தி செய்து, அவ்வாறாக விநியோகச் சங்கிலி முகாமைத்துவத்தை மேம்படுத்துதல்

பொலன்னறுவை மாவட்டத்தில் விவசாயப் போதனாசிரியர்களாக அறியப்பட்ட பிரிவு.`.கிராம மட்டத்தில் பணியாற்றும் விஸ்தரிப்பு பணியாளருக்காக பயிற்சிச் செய்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. பொலன்னறுவையில் கிரிதலே ஹொட்டேலில் 2008 ஜுன் 12 முதல் 14 வரை செய்திட்டம் நடத்தப்பட்டது. பொதுநலவரசு செயலகத்துடனான கூட்டுமுயற்சியுடன் செய்திட்டத்தை ஹெ.க.ஆ.ப.நிறுவகம் அமுல்படுத்தியது.

பொலன்னறுவை மாவட்டத்தில் கமத்தொழில் திணைக்களத்தின் கீழ் 31 பயிற்றுவிக்கப்பட்ட கமத்தொழில் போதனாசிரியர்களின் பயிற்சியே செய்திட்டதட்தின் விளைவாகும். 2009க்கு மேலும் இரு பயிற்சிச் செய்திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளதுடன், இறுதியாக இலங்கையில் சந்தைப்படுத்தல் விஸ்தரிப்பு முறைமையொன்று தாபிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 4. வயது வந்தோர் பயிற்சி முறைமையியல் மீதான பயிற்சிச் செய்திட்டம்

**இணைப்பாளர்:** ஆர்.எம்.ஆர்.பண்டார

அவர்கள் விருத்தி செய்துள்ள திறன்களை மேம்படுத்துவதற்கு மேலதிகமாக, வயது வந்தோர் பயிற்சி முறைமையியலின் கருத்துருக்களினதும், முறைகளினதும் மீது பங்கெடுப்பாளரின் அறிவை உயர்த்துவதே பாரிய நோக்கமாகும்.

பதுளை மாவட்டத்தில் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காக இப் பயிற்சிச் செய்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. பண்டாரவளையில் கமநல அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் 2008 ஓகஸ்ட் 14 முதல் 16 வரை செய்திட்டம் நடத்தப்பட்டது. பயிற்சிச் செய்திட்டத்தில் 32 கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பங்கெடுத்தார்கள். கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் 32 பயிற்றுவிக்கப்பட்ட கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பயிற்சியே செய்திட்டத்தின் விளைவாகும்.

## 5. இலங்கையில் கமத்தொழில் ஆராய்ச்சி, உற்பத்தி உதவியாளர்களின் (க.ஆ.உ.உ.) பயிற்சிக்கான பயிற்றுனர் - பயிற்சி மீதான பயிற்சிச் செய்திட்டம்

**இணைப்பாளர்:** ஆர்.எம்.ஆர்.பண்டார

கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சின் வேண்டுகோளின் பேரில், மேற்படி பயிற்சிச் செய்திட்டத்தை ஹெ.க.ஆ.ப.நிறுவகம் திட்டமிட்டு, நடத்தியது. ஒரேநாளில் நாடுபூராவும் மேற்படி பயிற்சிச் செய்திட்டங்களை ஒழுங்குபடுத்துவதற்கும், நடத்துவதற்கும் பௌதீக மற்றும் மனித வளங்களை ஹெ.க.ஆ.ப.நிறுவகம் கொண்டிருக்காதபடியினால், க.ஆ.உ. உதவியாளர்களுக்கு பயிற்றுனர்-பயிற்சிச் செய்திட்டமொன்றை ஒழுங்குபடுத்தி, நடத்துவதென அவர்கள் தீர்மானித்தார்க்ள. தற்போது, கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் களமட்ட உத்தியோகத்தர்களாக 9,000க்கு மேற்பட்ட க.ஆ.உ. உதவியாளர்கள் பணியாற்றுகின்றார்கள்.

பொத்துஹரவில் (குருநாகல்) கமநல அபிவிருத்தி, பயிற்சி நிலையத்தில் 2008 நொவம்பர் 27 முதல் 30 வரை இரு பயிற்றுனர் பயிற்சிச் செய்திட்டங்கள் நடத்தப்பட்டன. முதலாவது இரு நாள் பயிற்சிச் செய்திட்டம் நொவம்பர் 27-28 வரை நடத்தப்பட்டதுடன், இரண்டாவது செய்திட்டம் 2008 நொவம்பர் 29-30 வரை நடத்தப்பட்டது. கமலந அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் பணியாற்றுகின்ற 41 அரசாங்க உத்தியோகத்தர்கள் பயிற்சிச் செய்திட்டத்தில் பங்கெடுத்தனர். உத்தேசமான க.ஆ.உ. உதவியாளர் பயிற்சிச் செய்திட்டங்களின் கீழ் 41 பயிற்றுவிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களின் பயிற்சியே செய்திட்டத்தின் விளைவாகும்.

## புள்ளிவிபர, தரவு படியமைத்தல் அலகு

இலங்கையில் கமத்தொழில் அபிவிருத்தி மீதான தகவலுக்கான தேசிய நிலையமொன்றாக புள்ளிவிபர, தரவு படியமைத்தல் அலகு தொழிற்படுகின்றது. USAID உடனான கூட்டு முயற்சியுடன், ஹெ.க.ஆ.ப.நி.இல் கமத்தொழில் முகாமைத்துவ தகவல் முறைமையைத் தாபிப்பதன் மூலம் தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு 1979இல் நிலையம் தாபிக்கப்பட்டது. பரந்த வகையிலான உபயோகிப்பாளர்களுக்கு, அதாவது ஆராய்ச்சியாளர்கள், திட்டமிடலாளர்கள், கொள்கை வகுப்போர், பட்டதாரி மாணவர்கள், கமக்காரர்கள் மற்றும் வேறு அக்கறையிலான தனிப்பட்டவர்கள் ஆகியோருக்கு கமத்தொழில் மற்றும் கமநல தகவலைத் தோற்றுவிப்பதும், பரப்புவதுமே நிலையத்தின் பிரதான பணியாகும்.

மேற்படி விடயத்திற்குப் புறம்பாக, ஆராய்ச்சி ஆய்வுகளின் தரவுப் பகுப்பாய்வை அலகு மேற்கொண்டது.

### கமநல தரவுத்தளம் தொடர்பான செயற்பாடுகள்

ஆரம்ப நிலை மற்றும் இரண்டாம் நிலை மூலங்களிலிருந்து தரவுகளை தரவு வங்கி சேகரிப்பதுடன், கமத்தொழில் பயிர்கள், கால்நடை, குடித்தொகையியல் மற்றும் முக்கியமான புள்ளிவிபரங்கள் ஆகியன மீது தரவுத் தளமொன்றைப் பராமரிக்கின்றது. கமத்தொழில் பயிர்கள் தொடர்பில் பின்வரும் தரவுத் தொடர்கள் 2008ஆம் ஆண்டின் போது புதுப்பிக்கப்பட்டன.

1. உணவுப் பண்டங்களின் சராசரி மொத்த விலைகள்
2. நெல்லின் மீதான புள்ளிவிபரம் (விதைக்கப்பட்ட விஸ்தீரணம், சராசரி விளைச்சல் மற்றும் உற்பத்தி) மற்றும் நெல்லின் வளர்ச்சிச் செயற்பாடுகள் தொடர்பான தரவு
3. நெல் தவிர்ந்த பயிர்களின் செய்கை பண்ணப்பட்ட விஸ்தீரணம் மற்றும் உற்பத்தி
4. கமத்தொழில் பண்டங்களின் இறக்குமதி/ஏற்றுமதி
5. உணவுப் பண்டங்களின் பாவனையின் தரவு
6. உரம் மற்றும் கமத்தொழில் உள்ளீடுகள்

ஆண்டின் போது, 43,011 எண்ணிக்கையிலான பதிவேடுகள் சேகரிக்கப்பட்டு, சரிபார்க்கப்பட்டு, அத்துடன் கணனிமயப்படுத்தப்பட்ட தரவு வங்கியினுள் பதிவு செய்யப்பட்டது.

### தரவுக்கான வேண்டுகோள்கள்

2008ஆம் ஆண்டின் போது தரவு வங்கியினால் நிறைவேற்றப்பட்ட வேண்டுகோள்களின் மொத்த எண்ணிக்கை 159 ஆகும். மொத்தமான வேண்டுகோள்களில் நிறுவகத்தில் உள்ள 73 பாவனையாளர்களினால் விடுவிக்கப்பட்ட அதே வேளை, மீதியான வேண்டுகோள்கள் நிறுவனத்திற்கு வெளியேயுள்ள பாவனையாளர்களிடம் இருந்து விடுவிக்கப்பட்டதாகும். வெளியார் பாவனையாளர்களின் விடுக்கப்பட்ட வேண்டுகோள்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன.

| | வேண்டுகோள்களின் எண். | % |
|---|---|---|
| பல்கலைக்கழக பதவியணியினர்/பட்டதாரி மாணவர்கள்/ வேறு மாணவர்கள் | 22 | 25.6 |
| தனியார் கம்பனிகள்/தனியார் நிறுவனங்கள் | 26 | 30.2 |
| அமைச்சுக்கள்/அரசாங்க திணைக்களங்கள்/பகுதியான | 32 | 37.2 |
| அரசாங்க நிறுவனங்கள் | 6 | 7.0 |
| தனிப்பட்டவர்கள | | |
| **மொத்தம்** | 86 | 100.0 |

### தரவு வங்கியின் செயற்பாடுகள்

தரவைத் தொகுத்தல், தரவைச் சரிபார்த்தல் மற்றும் முறைமை முன்னேற்றங்கள் போன்ற மூன்று வகுதிகளில் தரவு வங்கி செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆண்டின் போது இலகுவான அடையத்தக்க தளக்கோலங்களை தயாரிப்பதற்காக தரவு-மீட்பித்தல் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. உற்பத்தியின் ஆகுசெலவு, உரம் மற்றும் வருமானத் தரவு ஆகியவற்றின் சரிபார்த்தலுக்காக முழுத் தரவுத்தளமும் சரிபார்க்கப்பட்டது. தரவின் கிட்டும்தன்மையைச் சோதிப்பதற்கு காட்டிகள் தோற்றுவிக்கப்பட்டன.

### ஆராய்ச்சி ஆய்வுகளின் தரவு படியமைத்தல் செயற்பாடுகள்

ஆண்டின் போது பின்வரும் ஆய்வுகளின் தரவுப் பகுப்பாய்வு முடிக்கப்பட்டது:

1. மலைநாட்டு மரக்கறிச் செய்கையில் பேணல் செய்கைத் தொழில்நுட்பங்களை பரப்புதல் - போக்குகளும், தாக்கங்களும்
2. உடவளவை தேசியப் பண்ணையில் பால்பசுமாடுகளின் பிரச்சனைகள் மீதான ஆய்வு
3. இலங்கையில் வேறுபட்ட துறைகள் மத்தியில் நீரின் ஒதுக்கீடு: அனுபவத்தின் பாடம்
4. இல்ங்கையில் வழிந்தோடல் மழைநீர் அறுவடையின் மதிப்பீடு
5. கிராமியத் துறைக்கு விஸ்தரிப்புச் சேவையை வழங்குவதில் கமத்தொழில் ஆராய்ச்சி, உற்பத்தி உதவியாளரின் மட்டுப்படுத்தல்களினதும், ஆற்றலளவுகளினதும் மீதான ஆய்வு
6. பண்ட மதிப்பாய்வு மற்றும் கமத்தொழில் பக்கவரை
7. தேசிய உணவு இயக்கச் செய்திட்டம்
8. இல்ங்கையில் குடியேற்றத் திட்டங்களில் முறைசாரா காணி கொடுக்கல் வாங்கல்கள் மீதான ஆய்வு
9. இலங்கையில் வேறு களப்பயிர்களின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்

### ஹெ.க.ஆ.ப.நி. இணையதளம்

கிரமமான அம்சமொன்றாக, சந்தைப்படுத்தல், உணவுக் கொள்கை, கம - வியாபாரப் பிரிவிலிருந்து வரும் நாளாந்த விலைகள் இணையத்தளத்தில் சேர்க்கப்பட்டது. மேலதிகமாக, ஆராய்ச்சி வெளியீடுகள் மீதான முக்கியமான தகவலும் இணையதளத்துடன் சேர்க்கப்பட்டது. இணையதளத்தின் தளக்கோலத்தை மேம்படுத்துவதற்கு அவசியமான திரிபுபடுத்தல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

**வேறு செயற்பாடுகள்**
எழுதுவினைஞர் பணியாளரின் கணனிகள் திறன்களை மேம்படுத்தவதற்கு கணணி விழிப்பியல் நெறியொன்று வடிவமைக்கப்பட்டு, நடத்தப்பட்டது.

## நூலகம்

ஹெ.க.ஆ.ப.நிறுவகத்தின் ஆராய்ச்சிப் பதவியணியினரினதும், ஏனைய ஆர்வமிக்க ஆட்களினதும், முகவராண்மைகளினதும் நன்மைக்காக கமநலத்துறை தொடர்பாக தகவலைச் சேகரிப்பதும், தொகுப்பதும், மீட்பிப்பதும், பரப்புவதும் நூலகத்தின் பிரதான நோக்கமாகும். ஆண்டின் போது 1,183 நூல்களையும், 283 சஞ்சிகை இதழ்களையும் பதவியணியினர் இரவல் பெற்றனர். ஆண்டின் போது நூலகத்திற்கு 156 பேர் வருகைதந்ததுடன், இவர்களில் பெரும்பாலானோர் பல்கலைக்கழக மாணவர்களாவர்.

தற்போது நூலகத்தின் உடமைகள் சுமார் 21,272 நூல்களையும், சுமார் 20,550 சஞ்சிகைகளின் இதழ்களையும் கொண்டுள்ளது.

**நூல்கள், சஞ்சிகைகள், அறிக்கைகள், தேசப்படங்கள், CDக்கள் ஆகியவற்றைக் கையகப்படுத்தல்**
வருடத்தின் போது நூலகத்தினால் கையகப்படுத்தப்பட்ட நூல்களும், அறிக்கைகளும் 259 ஆகும். இவற்றில், 87 நேரடிக் கொள்வனவுகளாகும் என்பதுடன் 100 விடயங்கள் அன்பளிப்பு அடிப்படையின் ஒன்றின் மீது கிடைத்தன. பாரிய தொகையிலான பருவகால வெளியீடுகள், செய்திக் கடிதங்கள், வருடாந்த அறிக்கைகள் ஆகியன வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிறுவனங்களிலிருந்து அன்பளிப்பு அல்லது பரிமாற்ற அடிப்படையில் கிட்டின. நூலகம் 20 வெளிநாட்டு சஞ்சிகைகளுக்கும், 25 உள்நாட்டு சஞ்சிகைகளுக்கும் சந்தா செலுத்தியது.

**நூலக சேவைகள்**
இலக்கிய தேடல்கள், மேற்கோள் சேவைகள் போன்ற தகவல் மற்றும் ஆவணப்படுத்தல் சேவைகளுக்கும் மற்றும் புகைப்படப் பிரதியெடுத்தல் சேவைகளுக்குமான வேண்டுகோள்கள் ஆராய்ச்சி பணியாளர்களுக்கும், வெளியார் பாவனையாளர்களுக்கும் வழங்கப்பட்டன.

நூலகத்தில் ADSL வசதியுடன் ஆராய்ச்சிப் பணியாளருக்கு இன்டர்நெற் அடிப்படையிலான தகவல் வசதிகளுக்கான அடைதல் மேலும் விஸ்தரிக்கப்பட்டது. ஆராய்ச்சிப் பணியாளருக்கு நடைமுறையிலான விழிப்பியல் சேவைகளை வழங்குவதற்கு, நடைமுறையிலான சஞ்சிகைகளின் உள்ளடக்கப் பக்கங்கள் பரிசீலிக்கப்பட்டு, தனிப்பட்ட ஆராய்ச்சியாளர்களுக்கு ஈமெயில் செய்யப்பட்டது.

எழுதியவர், தலைப்பு, விடயம் ஆகியவற்றினால் சேகரிப்பினை தேடுவதற்கு உபயோகிப்பாளர்களுக்கு நூலக தரவுத்தளம் வழங்கப்பட்டது. ஆராய்ச்சிப் பணியாளருக்கு சம்பந்தப்பட்ட பலதரப்பட்ட விடயங்கள் மீதான செய்திப் பத்திரிகைக் கட்டுரைகளின் சேகரிப்பு ஆண்டின் போது கிரமமான செயற்பாடொன்றாகும்.

**நூலகங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு**
கமத்தொழில் நூலகங்கள் தகவல் வலைப்பின்னலின் (AGRINET) உறுப்பாக நூலகம் விளங்குவதுடன், க.ஆ.கொ.ச. நூலகமே குவியப் புள்ளியாகும். வருடத்தின் போது AGRINET SDCP திட்டத்தில் நூலகம் தொடர்ந்தும் பங்கெடுத்தது. ஏனைய அங்கத்துவ நூலகங்கள் 14 சஞ்சிகைகளின் 218 பொருளடக்கப் பக்கங்களையும், 12 சஞ்சிகைகளின் புகைப்படப் பிரதிகளையும் கோரியிருந்ததுடன், நிறுவகத்தின் ஆராய்ச்சி பணியாளரின் வேண்டுகோளின் பேரில் 5 சஞ்சிகைகளின் 36 பொருளடக்கப் பக்கங்களை பெற்றது.

2008ஆம் ஆண்டின் கடைசிக் காலாண்டிலிருந்து சஞ்சிகைக் கட்டுரைகளும், உள்ளடக்கப் பக்கங்களும் பரிசீலிக்கப்பட்டு, வேண்டுகோள் விடுத்த நூலகங்களுக்கு ஈமெயில் செய்யப்பட்டன.

க.ஆ.கொ.ச. நூலகத்தில் பராமரிக்கப்படுகின்ற தேசிய கமத்தொழில் நூல் விபரத் திரட்டு, தொகுதி 10க்கு கணனிமயப்படுத்தப்பட்ட நூல்விபரத் திரட்டுத் தகவலை நூலகம் வழங்கியது.

**வெளியீட்டு பரிமாற்றம் செய்திட்டம்**

2008இல் விடுவிக்கப்பட்ட ஹெ.க.ஆ.ப.நி.வெளியீடுகள் பரிமாற்ற அடிப்படையின் மீது நான்கு உள்ளூர் நிறுவன நூலகங்களுக்கு அனுப்பப்பட்டன.

## வெளியீட்டு அலகு

பிரதிப் பணிப்பாளரின் (ஆராய்ச்சி) நோக்கெல்லையின் கீழ் தொழிற்படும் வெளியீட்டுப் பிரிவு சகல மூன்று மொழிகளிலும் ஆராய்ச்சி அறிக்கைகள், இடையீந்த கட்டுரைகள், சஞ்சிகைகள், செய்திக் கடிதங்கள், செய்தித்திரட்டுகள், கையேடுகள், சிற்றேடுகள், மற்றும் வேறு தகவல் சாதனங்கள் ஆகியவற்றைப் பதிப்பித்தலிலும், வெளியிடுவதிலும் வெளியீட்டு அலகு ஈடுபட்டுள்ளது. ஆண்டின் போது '*அபி வவமு ரட்ட நகமு*' திட்டத்தின் கீழ் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகத்திற்கு பிரச்சார இயக்கத்தில் அலகின் உறுப்பினர் ஒருவர் சம்பந்தப்பட்டிருந்தார்.

ஆண்டின் போது பின்வரும் 11 வெளியீடுகள் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் விடுவிக்கப்பட்டன:

i. குருஷிகர்ம பதிகட - 2006 (சிங்களம்)
ii. இலங்கையில் பயிர் காப்புறுதித் திட்டத்தின் மதிப்பாய்வு
iii. கமத்தொழில் சந்தைப்படுத்தல் தகவல் முறைமைகள் - மாத்தளை மாவட்டத்தில் விடய ஆய்வு
iv. ஸ்ரீலங்காவே சாம்பிரதாகயக ஆஹார ரத்தாவ (சிங்களம்)
v. நெல் குற்றுதல் அளவீடு - 2006
vi. உணவுப் பண்டங்கள் விலைகள் 2000 - 2007
vii. குருஷிபோக விவரணய - 2005 (சிங்களம்)
viii. குடித்தன மட்டத்தின் மீது அரிசி பதப்படுத்தலின் சாத்தியவளம்
ix. இலங்கையில் சிறு உடமையாளர் கமத்தொழில் மீது மாகாண சபை முறைமையின் தாக்கம்
x. இலங்கையில் உணவுப் பயிர் துறையில் அண்மைய தொழில்சந்தைப் போக்குகள்
xi. கம-இரசாயனங்களின் விலை ஓரங்களின் பகுப்பாய்வு

**ஆண்டின் போது ஏனைய வெளியீடுகள்**

i. ஆண்டு அறிக்கை - 2006 (ஆங்கிலம்)
ii. ஆண்டு அறிக்கை - 2006 (தமிழ்)
iii. "கொவிஜனதா" விசேட இதழ்
iv. ஆண்டு அறிக்கை - 2006 (சிங்களம்)
v. "கொவிஜனதா" ஏப்ரல்-ஜுன், 2008
vi. Sri Lanka Journal of Agrarian Studies, தொகுதி 11, இல. 1, 2008
vii. ஆண்டு அறிக்கை - 2007 (ஆங்கிலம்)
viii. "கொவிஜனதா" ஜுலை-செப்ரெம்பர், 2008

கரிசனையிலான காலத்தின் போது, பின்வரும் பொருட்காட்சிகளில் அலகு பங்கெடுத்தது:

i. "தயட்ட கிருள", ப.ஞா.ச.ம.ம., 2008 பெப்ரவரி 7-10
ii. "காலு சமய - 2008" காலி சமனல மைதானம், 2008 டிசம்பர் 23-27

## 2008 டிசம்பர் 31இல் உள்ளவாறு பதவியணியினர் நிலை

| | 31.12.2007ல் உள்ளவாறு நிலை | வருடத்தின் போது பதவி நீக்கம்/ ராஜினாமா | நியமனம் | 31.12.2008ல் உள்ளவாறு நிலை |
|---|---|---|---|---|
| பணிப்பாளர் | 01 | - | - | 01 |
| பிரதிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) | 01 | - | - | 01 |
| பிரிவுகளின் தலைவர்கள் | 06 | 02 | - | 04 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் | 25 | - | - | 26 |
| நிருவாகப் பதவியணியினர் | 07 | - | - | 07 |
| நூலகத்தின் சிரேஷ்ட பதவியணியினர் | 02 | - | - | 02 |
| தரவு அபிவிருத்தி அலகு | 02 | 01 | - | 01 |
| கணனி அலகு | 02 | - | - | 02 |
| வெளியீட்டு அலகு | 01 | - | - | 01 |
| புள்ளிவிபரப் பதவியணியினர் | 21 | 01 | - | 20 |
| தொழில்நுட்பப் பதவியணியினர் எழுதுவினைஞர், செயலாளர், | 01 | - | - | 01 |
| இணைந்த தரத்தினர் | 51 | 05 | 07 | 53 |
| இயக்குதல், இணைந்த தரத்தினர் | 33 | 05 | 02 | 36 |
| **மொத்தம்** | **153** | **14** | **09** | **155** |

## பதவியணியினரின் முன்னேற்றம்

**பட்டப்பின் படிப்பு செயல்திட்டங்கள்**

பின்வரும் ஆராய்ச்சி, பயிற்சி உத்தியோகத்தர்கள் பட்டப்பின்படிப்பு கற்கைகளில் ஈடுபட்டிருந்தனர்:

திரு.என்.பி.ஜி.சமந்த - கமத்தொழில் பொருளியலில் எம்பில், கமத்தொழில் பட்டத்திற்கு பிந்திய நிறுவனம், பேராதனை பல்கலைக்கழகம் (2006 டிசம்பர் முதல்)

திரு.டபிள்யு.எச்.டி.பிரியதர்ஷன - கமத்தொழில் பொருளியலில் எம்பில், கமத்தொழில் பட்டத்திற்கு பிந்திய நிறுவனம், பேராதனை பல்கலைக்கழகம் (2006 டிசம்பர் முதல்)

